# TNPSC GROUP IIA MAIN 2025 – 26 TEST BATCH
## TEST – IV SOCIO POLITICAL MOVEMENTS OF TAMILNADU & REASONING

1. Assertion (A): Iyothee Thass argued that the Paraiyars were originally Buddhists whose land was taken by Aryan invaders.
Reason (R): He believed returning to Buddhism would annihilate the caste system.
a. Both A and R are true, and R is the correct explanation of A.
b. Both A and R are true, but R is not the explanation of A.
c. A is true, but R is false.
d. A is false, but R is true.
e. Answer not known
கூற்று (A): அயோத்திதாசர், பறையர்கள் உண்மையில் ஆரியப் படையெடுப்பாளர்களால் நிலம் பறிக்கப்பட்ட பௌத்தர்கள் என்று வாதிட்டார்.
காரணம் (R): பௌத்த மதத்திற்குத் திரும்புவது சாதி அமைப்பை ஒழிக்கும் என்று அவர் நம்பினார்.
a. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கான சரியான விளக்கமாகும்.
b. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கான சரியான விளக்கமல்ல
c. A சரி, ஆனால் R தவறு.
d. A தவறு, ஆனால் R சரி
e. விடை தெரியவில்லை

2. With whom did Iyothee Thass co-found the Panchamar Mahajana Sabha in 1891?
a. Colonel H. S. Olcott b. Rettamalai Srinivasan
c. Anagarika Dharmapala d. Bikshu Sumangala Nayake
e. Answer not known
1891-ல் அயோத்திதாசர் யாருடன் இணைந்து பஞ்சமர் மகாஜன சபாவை நிறுவினார்?
a. கர்னல் H.S. ஆல்காட் b. ரெட்டமலை சீனிவாசன்
c. அனகாரிகா தர்மபாலா d. பிக்ஷு சுமங்கல நாயகே
e. விடை தெரியவில்லை

3. EVR questioned and severely criticised the cheramandevi controversy along with the leader ____.
a. S.N. Somayajulu b. P. Subbarayan c. P. Varadarajulu
d. C. Natesanar e. Answer not known
ஈ.வெ.ரா பெரியார் யாருடன் சேரன்மாதேவி குருகுலம் குறித்த சர்ச்சையை எதிர்த்து கோசம் எழுப்பினார்?
a. S.N. சோமாயாஜுலு b. P.சுப்பராயன் C. P. வரதராஜுலு
d. C. நடேசனார் e. விடை தெரியவில்லை

4. Iyothee Thass advocated for Dalits/Paraiyars in the following ways:
   a. Registering as "Casteless Dravidians" in the 1891 census
   b. Declaring in 1886 that Scheduled Castes were not Hindus
   c. Fighting for temple entry rights into Vishnu and Shiva temples
   d. All the above
   e. Answer not known

   அயோத்திதாசர் தலித்துகள் /பறையர்களுக்காகப் பின்வரும் வழிகளில் வாதிட்டார்:
   a. 1891 மக்கள் தொகை கணக்கெடுப்பில் "சாதியற்ற திராவிடர்கள்" என்று பதிவு செய்தல்
   b. 1886-ல் பட்டியல் சாதியினர் இந்துக்கள் அல்ல என்று அறிவித்தல்
   c. விஷ்ணு மற்றும் சிவன் கோயில்களில் நுழைவு உரிமைக்காகப் போராடுதல்
   d. மேற்கூறிய அனைத்தும்
   e. விடை தெரியவில்லை

5. Assertion (A): The Justice Party was renamed Dravidar Kazhagam in 1944 at the Salem conference.
   Reason (R): This renaming marked the merger of the Justice Party with Periyar's Self-Respect Movement and a shift away from electoral politics.
   a. Both A and R are true, and R is the correct explanation of A.
   b. Both A and R are true, but R is not the explanation of A.
   c. A is true, but R is false.
   d. A is false, but R is true.
   e. Answer not known

   கூற்று (A): 1944-ல் சேலம் மாநாட்டில் நீதிக்கட்சி திராவிடர் கழகம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
   காரணம் (R): இந்த பெயர் மாற்றம், நீதிக்கட்சி பெரியாரின் சுயமரியாதை இயக்கத்துடன் இணைந்ததையும், தேர்தல் அரசியலில் இருந்து விலகியதையும் குறித்தது.
   a. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கான சரியான விளக்கமாகும்.
   b. A மற்றும் R இரண்டும் சரி, ஆனால் R என்பது A-விற்கான விளக்கம் அல்ல.
   c. A சரி, ஆனால் R தவறு.
   d. A தவறு, ஆனால் R சரி.
   e. விடை தெரியவில்லை

6. Which of the following is wrong among regarding Justice party rule?
   a. The Madras Panchayats Act was passed in 1925.
   b. Porompoke lands were allotted to landless poor to construct houses.
   c. Staff Selection Board was created in 1924.
   d. The working of university of Madras was reorganized.
   e. Answer not known

   நீதிக்கட்சி ஆட்சியுடன் பொருந்தாதது எது?
   a. மெட்ராஸ் பஞ்சாயத்து சட்டம் இயற்றப்பட்டது 1925
   b. நிலமில்லா ஏழை மக்களுக்கு வீடுகட்ட புறம்போக்கு இடங்கள் வழங்கப்பட்டன.
   c. பணியாளர் தேர்வாணைய அமைப்பு 1924ல் உருவானது
   d. மெட்ராஸ் பல்கலைக்கழக செயற்பாடுகள் திருத்தி அமைக்கப்பட்டன.
   e. விடை தெரியவில்லை

7. Assertion (A): The States Reorganization Act of 1956 led to linguistic reorganization of states, affecting Madras Presidency.
Reason (R): Madras State was renamed Tamil Nadu immediately after this Act.
a. Both A and R are true, and R is the correct explanation of A.
b. Both A and R are true, but R is not the explanation of A.
c. A is true, but R is false.
d. A is false, but R is true.
e. Answer not known

கூற்று (A): 1956 ஆம் ஆண்டின் மாநில மறுசீரமைப்புச் சட்டம், மொழிவாரி மாநில மறுசீரமைப்புக்கு வழிவகுத்தது, இது சென்னை மாகாணத்தைப் பாதித்தது.
காரணம் (R): இந்தச் சட்டத்திற்குப் பிறகு உடனடியாக சென்னை மாநிலம் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றப்பட்டது.
a. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கான சரியான விளக்கமாகும்.
b. A மற்றும் R இரண்டும் சரி, ஆனால் R என்பது A-விற்கான விளக்கம் அல்ல.
c. A சரி, ஆனால் R தவறு.
d. A தவறு, ஆனால் R சரி.
e. விடை தெரியவில்லை

8. Which of the following events are associated with anti-Hindi agitations in Tamil Nadu?
a. 1931 b. 1944 c. 1965
d. 1969 e. Answer not known

பின்வரும் நிகழ்வுகளில் எவை தமிழ்நாட்டில் நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்களுடன் தொடர்புடையவை?
a. 1931 b. 1944 c. 1965
d. 1969 e. விடை தெரியவில்லை

9. Which of the following Tamil scholars wrote a number of essays on science?
a. C.W. Damotharnar b. Parithimar Kalignar c. Maraimalai Adigal
d. U.V. Swaminathar e. Answer not known

அறிவியல் தொடர்பாக பல கட்டுரைகளை வெளியிட்ட தமிழ்ப்புலவர்?
a. C.W. தாமோதனார் b. பரிதிமாற்கலைஞர் c. மறைமலை அடிகள்
d. U.V.சுவாமிநாதர் e. விடை தெரியவில்லை

10. Which movement's social reform programmes impressed M. Singaravelu and communists, leading to collaboration?
a. Justice Party b. Self-Respect Movement
c. Vaikom Satyagraha d. Non-Cooperation Movement
e. Answer not known

எந்த இயக்கத்தின் சமூக சீர்திருத்தத் திட்டங்கள் எம். சிங்காரவேலுவையும் பொதுவுடைமைவாதிகளையும் கவர்ந்து, ஒத்துழைப்புக்கு வழிவகுத்தது?
a. நீதிக்கட்சி b. சுயமரியாதை இயக்கம்
c. வைக்கம் சத்தியாகிரகம் d. ஒத்துழையாமை இயக்கம்
e. விடை தெரியவில்லை

11. Assertion (A): The Congress government's introduction of compulsory Hindi in schools triggered anti-Hindi agitations led by Periyar.
Reason (R): Periyar viewed this as an imposition threatening Tamil identity and Dravidian culture.
a. Both A and R are true, and R is the correct explanation of A.
b. Both A and R are true, but R is not the explanation of A.
c. A is true, but R is false.
d. A is false, but R is true.
e. Answer not known

கூற்று (A): பள்ளிகளில் கட்டாய இந்தியை காங்கிரஸ் அரசாங்கம் அறிமுகப்படுத்தியது, பெரியாரின் தலைமையில் இந்தி எதிர்ப்புப் போராட்டங்களைத் தூண்டியது.
காரணம் (R): இதைத் தமிழ் அடையாளம் மற்றும் திராவிடப் பண்பாட்டிற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் ஒரு திணிப்பாகப் பெரியார் கருதினார்.
a. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கான சரியான விளக்கமாகும்.
b. A மற்றும் R இரண்டும் சரி, ஆனால் R என்பது A-விற்கான விளக்கம் அல்ல.
c. A சரி, ஆனால் R தவறு.
d. A தவறு, ஆனால் R சரி.
e. விடை தெரியவில்லை

12. Consider the following statements.
I. In Tamilnadu, the proliferation of printing press acted as a catalyst for spread of secular ancient Tamil literature.
II. The rational ideas of Tamilnadu became a model for constructive developments of the modern Indian state.

a. I only true    b. II only true    c. Both true
d. Both false    e. Answer not known

கீழ்க்கண்ட வாக்கியங்களைக் கவனி
I. தமிழ்நாட்டில் அச்சுக்கூடங்கள் பெருக்கம் மதச்சார்பற்ற பழமையான தமிழ் இலக்கியங்கள் பரவ வழிவகுத்தது.
II. பகுத்தறிவு சார்ந்த கருத்துக்கள் தமிழ்நாட்டின் ஆக்கப்பூர்வ வளர்ச்சியாக நவீன இந்தியாவின் மாநிலமாக தமிழகத்தை மாற்றியது

a. I மட்டும் சரி    b. II மட்டும் சரி    c. இரண்டும் சரி
d. இரண்டும் தவறு    e. விடை தெரியவில்லை

13. Factors responsible for the decline of the Justice Party:
1. Loss of support among depressed sections and minorities
2. Radicalization of the Self-Respect Movement under Periyar
3. Elitist and pro-British outlook
4. Periyar's entry into electoral politics

a. 1, 2    b. 2, 3    c. 1, 2, 3
d. 1, 2, 4    e. Answer not known

நீதிக்கட்சியின் வீழ்ச்சிக்குக் காரணமான காரணிகள்:
1. ஒடுக்கப்பட்ட பிரிவினர் மற்றும் சிறுபான்மையினர் மத்தியில் ஆதரவை இழந்தது
2. பெரியாரின் கீழ் சுயமரியாதை இயக்கம் தீவிரமயமாக்கப்பட்டது
3. மேட்டுக்குடி மற்றும் பிரிட்டிஷ் சார்பு மனப்பான்மை
4. பெரியார் தேர்தல் அரசியலில் நுழைந்தது

a. 1, 2    b. 2, 3    c. 1, 2, 3
d. 1, 2, 4    e. விடை தெரியவில்லை

14. The famous slogan pronounced by Periyar at the Salem Conference was:
a. Tamil Nadu for Tamils b. Dravida Nadu for Dravidians
c. Hindi Never, Tamil Ever d. Casteless Society Now
e. Answer not known
சேலம் மாநாட்டில் பெரியார் முழங்கிய புகழ்பெற்ற முழக்கம் எது?
a. தமிழர்களுக்கே தமிழ்நாடு
b. திராவிடர்களுக்கே திராவிட நாடு
c. இந்தி ஒருபோதும் வேண்டாம், தமிழ் எப்போதுமே வேண்டும்
d. சாதியற்ற சமூகம் இப்போதே வேண்டும்
e. விடை தெரியவில்லை

15. Consider the statements about Mudichudum Perumal.
I. He criticised rule of Rajah of Travancore as rule of white devils.
II. He commenced his meditation at Chidambaram.
a. I only true b. II only true c. Both true
d. Both false e. Answer not known
முடிசூடும் பெருமாள் குறித்த வாக்கியங்களைக் கவனி.
I. திருவாங்கூர் ராஜாவின் ஆட்சியை வெள்ளை பேய்களின் ஆட்சி என குற்றம் சாட்டியவர்.
II. சிதம்பரத்தில் தன் தியானத்தைத் துவக்கினார்
a. I மட்டும் சரி b. II மட்டும் சரி c. இரண்டும் சரி
d. இரண்டும் தவறு e. விடை தெரியவில்லை

16. On which date did the Dravida Munnetra Kazhagam (DMK) decide to observe as a 'Day of Mourning' in 1965 to protest Hindi as the official language?
a. 15 August 1965 b. 26 January 1965 c. 1 November 1965
d. 19 June 1965 e. Answer not known
இந்தியை ஆட்சி மொழியாக ஆக்குவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், 1965-ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் (திமுக) எந்தத் தேதியை “துக்க நாளாக“ அனுசரிக்க முடிவு செய்தது?
a. 15 ஆகஸ்ட் 1965 b. 26 ஜனவரி 1965 c. 1 நவம்பர் 1965
d. 19 ஜுன் 1965 e. விடை தெரியவில்லை

17. In which year was the Madras Presidency formed as a multilingual province?
a. 1801 b. 1816 c. 1837
d. 1856 e. Answer not known
எந்த ஆண்டில் சென்னை மாகாணம் ஒரு பன்மொழி மாகாணமாக உருவாக்கப்பட்டது?
a. 1801 b. 1816 c. 1837
d. 1856 e. விடை தெரியவில்லை

18. Consider the statements
I. Linguistic Research on Dravidian languages underpinned the process of Tamil Rennaissance.
II. Tamil Renaissance contributed to the origin and growth of Dravidian consciousness.
a. I only true b. II only true c. Both true
d. Both false e. Answer not known

பின்வரும் கூற்றுகளை ஆய்க

I. திராவிட மொழிகளின் மீதான மொழியியல் ஆராய்ச்சி தமிழ் மறுமலர்ச்சியை ஆதரித்தது

II. திராவிட உணர்வு தோன்றவும் வளரவும் தமிழ் மறுமலர்ச்சி பங்கு வகிக்கிறது

a. I மட்டும் சரி b. II மட்டும் சரி c. இரண்டும் சரி

d. இரண்டும் தவறு e. விடை தெரியவில்லை

19. Francis Whyte Ellis is credited with first declaring that South Indian languages belong to a separate family in his work associated with:

a. A Comparative Grammar of the Dravidian Languages (1856)

b. Note to Introduction in Alexander Duncan Campbell's Telugu Grammar (1816)

c. Deciphering Brahmi script

d. Thirukkural translation

e. Answer not known

தென்னிந்திய மொழிகள் ஒரு தனி மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவை என்று முதன்முதலில் அறிவித்த பெருமைக்குரிய பிரான்சிஸ் ஒயிட் எல்லிஸின் பணி எதனுடன் தொடர்புடையது?

a. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கண நூல் (1856)

b. அலெக்சாண்டர் டங்கன் கேம்ப்பெல்லின் தெலுங்கு இலக்கண நூலின் முன்னுரைக்கான குறிப்பு (1816)

c. பிராமி எழுத்துக்களைப் புரிந்துகொள்வது

d. திருக்குறள் மொழிபெயர்ப்பு

e. விடை தெரியவில்லை

20. Who hailed Francis Whyte Ellis as the forerunner of the Tamil Renaissance?

a. Robert Caldwell b. Singaravelar c. Marimalai adigal

d. Iyothee Thass e. Answer not known

பிரான்சிஸ் ஒயிட் எல்லிஸைத் தமிழ்ப் மறுமலர்ச்சியின் முன்னோடி என்று போற்றியவர் யார்?

a. ராபர்ட் கால்டுவெல் b. சிங்காரவேலர் c. மறைமலை அடிகள்

d. அயோத்திதாசர் e. விடை தெரியவில்லை

21. Consider the statements

I. Rediscovery of ancient classics and their publication is considered the foundation of Tamil renaissance.

II. Robert Caldwell established the close affinity between Tamil and Sankrit and also established the antiquity of Tamil.

a. I only true b. II only true c. Both true

d. Both false e. Answer not known

பின்வரும் கூற்றுகளை ஆய்க

I. பண்டைய நூல்கள் மற்றும் அவற்றின் வெளியீடுகளின் மறுகண்டுபிடிப்பு தமிழ் மறுமலர்ச்சிக்கு அடித்தளமாக கருதப்படுகிறது

II. ராபர்ட் கால்டுவெல் தமிழ் மற்றும் சமஸ்கிருதம் இடையே நெருங்கிய இணக்கத்தை கண்டறிந்ததுடன் தமிழின் பழமையையும் கண்டறிந்தார்

a. I மட்டும் சரி b. II மட்டும் சரி c. இரண்டும் சரி

d. இரண்டும் தவறு e. விடை தெரியவில்லை

22. As a result of accepting Tremancre's report in 1892, how many acres of land were distributed to lower caste groups?
a. 12 lakh acres b. 25 lakh acres c. 20 lakh acres
d. 50 lakh acres e. Answer not known
1892-ல் ட்ரெமன்கர் அறிக்கையை ஏற்றுக்கொண்டதன் விளைவாக, தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு எத்தனை ஏக்கர் நிலம் விநியோகிக்கப்பட்டது?
a. 12 லட்சம் ஏக்கர் b. 25 லட்சம் ஏக்கர் c. 20 லட்சம் ஏக்கர்
d. 50 லட்சம் ஏக்கர் e. விடை தெரியவில்லை

23. In which year did the Madras Presidency Government declare financial assistance policies and open new schools for lower caste people?
a. 1885 b. 1892 c. 1809
d. 1890 e. Answer not known
எந்த ஆண்டில் சென்னை மாகாண அரசு நிதி உதவித் திட்டங்களை அறிவித்து, தாழ்த்தப்பட்ட மக்களுக்காகப் புதிய பள்ளிகளைத் திறந்தது?
a. 1885 b. 1892 c. 1809
d. 1890 e. விடை தெரியவில்லை

24. Consider the statements.
I. S. Vaiyapuri held high radical philosophy to defend rights of socially underprivileged people.
II. Tamil language movements created awareness among Tamils about their historical tradition and literature.
a. I only true b. II only true c. Both true
d. Both false e. Answer not known
பின்வரும் கூற்றுகளை கவனி
I. S. வையாபுரி சமூகத்தில் பின்தங்கிய மக்களின் உரிமையை பாதுகாக்க உயர் தீவிர தத்துவத்தை கொண்டிருந்தார்
II. தமிழ்மொழி இயக்கங்கள் தமிழர்களிடையே அவர்களின் வரலாற்று பாரம்பரியம் மற்றும் இலக்கியங்களை பற்றிய விழிப்புணர்வை உருவாக்கிறது
a. I மட்டும் சரி b. II மட்டும் சரி c. இரண்டும் சரி
d. இரண்டும் தவறு e. விடை தெரியவில்லை

25. British officers who submitted reports on the Ryotwari System highlighting illegal land occupations include:
a. Francis Ellis and Thomas Munro
b. Tremancre and Miller
c. Chatrapati Sahu and Narayana Guru
d. Ayothidasa and Singaravelar
e. Answer not known
ரயத்துவாரி முறை குறித்த அறிக்கைகளைச் சமர்ப்பித்து, சட்டவிரோத நில ஆக்கிரமிப்புகளை எடுத்துரைத்த பிரிட்டிஷ் அதிகாரிகள் யார்?
a. பிரான்சிஸ் எல்லிஸ் மற்றும் தாமஸ் மன்றோ
b. ட்ரெமன்கர் மற்றும் மில்லர்
c. சத்ரபதி சாஹூ மற்றும் நாராயண குரு
d. அயோத்திதாசர் மற்றும் சிங்காரவேலர்
e. விடை தெரியவில்லை

26. Consider the statements about "Founder of Adi Dravida Mahajana Sabha".

I. He became the first elected Legislative Council member from depressed classes in Madras province.

II. He advocated the use of terms such as Adi-dravida and Adi-Andhra.

a. I only true b. II only true c. Both true
d. Both false e. Answer not known

"ஆதி திராவிட மகாஜன சபையை உருவாக்கியவர்" பற்றியபின்வரும் கூற்றுகளை கவனி.

I. இவர் மெட்ராஸ் மாகாணத்தின், தாழ்த்தப்பட்டவர்களின் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமேலவை உறுப்பினர்.

II. இவர் ஆதிதிராவிட மற்றும் ஆதி ஆந்திரா சொற்களை பயன்படுத்த வாதிட்டார்.

a. I மட்டும் சரி b. II மட்டும் சரி c. இரண்டும் சரி
d. இரண்டும் தவறு e. விடை தெரியவில்லை

27. The communal representation order issued in 1922 for Madras Presidency was called:

a. Order 128(1) b. Order 128(2) c. Miller Order
d. Panchami Order e. Answer not known

1922-ல் சென்னை மாகாணத்திற்காக வெளியிடப்பட்ட வகுப்புவாரி பிரதிநிதித்துவ ஆணை எவ்வாறு அழைக்கப்பட்டது?

a. ஆணை 128(1) b. ஆணை 128(2) c. மில்லர் ஆணை
d. பஞ்சமி ஆணை e. விடை தெரியவில்லை

28. Consider the following statement.

I. Montague's announcement of political reforms in 1917 intensified political discussions in Tamilnadu.

II. The act of 1919 provided reservations to Non – Brahmins.

a. I only true b. II only true c. Both true
d. Both false e. Answer not known

பின்வரும் கூற்றுகளை கவனி

I. மாண்டேகு அரசியல் சீர்திருத்தம் 1917 அறிக்கை தமிழ்நாட்டின் அரசியல் விவாதங்களை தீவிரப்படுத்தியது

II. 1919ஆம் ஆண்டு சட்டம் பிரமணரல்லாதோர்க்கு இட ஒதுக்கீடு வழங்கியது

a. I மட்டும் சரி b. II மட்டும் சரி c. இரண்டும் சரி
d. இரண்டும் தவறு e. விடை தெரியவில்லை

29. The first ruler to introduce reservation in government jobs for Non-Brahmins in 1902 was:

a. Raja of Panagal b. Chatrapati Sahu c. Narayana maharaj
d. Thomas Munro e. Answer not known

அரசு வேலைகளில் இடஒதுக்கீட்டை அறிமுகப்படுத்திய முதல் ஆட்சியாளர் யார்? 1902 ஆம் ஆண்டில் பிராமணர் அல்லாதவர்கள்:

a. பனகல் ராஜா b. சத்ரபதி சாஹு c. நாராயண மகாராஜ்
d. தாமஸ் மன்றோ e. விடை தெரியவில்லை

30. In which year, Justice party passed a resolution that Tamilnadu should be under direct control of the secretary of state for India?

a. 1937 b. 1938 c. 1939 d. 1940 e. Answer not known

தமிழ்நாடு இந்திய செயலாளரின் நேரடி கட்டுப்பாட்டின் கீழ் இருக்க வேண்டுமென எந்த ஆண்டு நீதிக்கட்சி தீர்மானம் நிறைவேற்றியது?

a. 1937 b. 1938 c. 1939

d. 1940 e. விடை தெரியவில்லை

31. Which year was English declared the official and administrative language in India?

a. 1835 b. 1854 c. 1885

d. 1892 e. Answer not known

இந்தியாவில் ஆங்கிலம் எந்த ஆண்டு அதிகாரப்பூர்வ மற்றும் நிர்வாக மொழியாக அறிவிக்கப்பட்டது?

a. 1835 b. 1854 c. 1885

d. 1892 e. விடை தெரியவில்லை

32. Periyar earned the nickname 'Jailbird', because he went to jail ___ times in 15 years.

a. 21 b. 22 c. 23 d. 24 e. Answer not known

பெரியார் 15 ஆண்டுகளில் _______ முறை சிறை சென்றதால் 'சிறைப்பறவை' என்று அழைக்கப்பட்டார்

a. 21 b. 22 c. 23 d. 24 e. விடை தெரியவில்லை

33. Dr. Muthulakshmi Reddy was influenced by which of the following personalities?

1) Mahatma Gandhi 2) Annie Besant

3) Sarojini Naidu 4) Jawaharlal Nehru

a. 1, 2, 3 b. 2 and 3 c. 2, 4

d. All of these e. Answer not known

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி பின்வரும் ஆளுமைகளில் யாரால் ஈர்க்கப்பட்டார்?

1) மகாத்மா காந்தி 2) அன்னி பெசன்ட்

3) சரோஜினி நாயுடு 4) ஜவஹர்லால் நேரு

a. 1, 2, 3 b. 2 மற்றும் 3 c. 2, 4

d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

34. Arrange the order of Premiers of Madras Presidency from 1930 to 1937.

i. Munisamy Naidu ii. P. T. Rajan

iii. K.V. Reddy Naidu iv. Poppili Raja

a.i, iv, ii, iii b. i, iv, iii, ii c. i, iii, ii, iv

d. i, iii, iv, ii e. Answer not known

1930லிருந்து 1937 வரை மெட்ராஸ் மாகாணத்தின் முதலமைச்சர்களை வரிசைப்படுத்து

i. முனிசாமி நாயுடு ii. P.T. ராஜன்

iii. K.V. ரெட்டி நாயுடு iv. பொப்பிலி ராஜா

a.i, iv, ii, iii b. i, iv, iii, ii c. i, iii, ii, iv

d. i, iii, iv, ii e. விடை தெரியவில்லை

35. What award was conferred on Dr. Muthulakshmi Reddy in recognition of her services?
a. Bharat Ratna b. Padma Bhushan c. Padma Shri
d. Padma Vibhushan e. Answer not known
டாக்டர் முத்துலட்சுமி ரெட்டியின் சேவைகளைப் பாராட்டி அவருக்கு வழங்கப்பட்ட விருது எது?
a. பாரத ரத்னா b. பத்ம பூஷன் c. பத்மஸ்ரீ
d. பத்ம விபூஷன் e. விடை தெரியவில்லை

36. Who is the author of the book Muthulakshmi Reddy: A Trailblazer in Surgery and Women's Rights?
a. V.R. Devika b. N.R. Anitha rathinam
c. V.K Shanta Ramani d. Dr. V. Shanta kumari
e. Answer not known
Muthulakshmi Reddy: A Trailblazer in Surgery and Women's Rights என்ற புத்தகத்தின் ஆசிரியர் யார்?
a. V.R. தேவிக்கா b. N.R. அனிதா ரத்தினம்
c. V.K. சாந்த ரமணி d. டாக்டர் V. சாந்தகுமாரி
e. விடை தெரியவில்லை

37. "Law and rules are only for the people. People are not for the law and the rules". Who said these lines?
a. Periyar b. C.N. Annadurai c. K. Kamaraj
d. Arundhati Roy e. Answer not known
"மக்களுக்காகவே சட்டம் மற்றும் விதிகள். சட்டம் மற்றும் விதிகளுக்காக மக்கள் இல்லை" இவ்வரிகளை கூறியவர் யார்?
a. பெரியார் b. C.N. அண்ணாதுரை c. K. காமராஜர்
d. அருந்ததி ராய் e. விடை தெரியவில்லை

38. Dr. Muthulakshmi Reddy was the only woman member on which educational survey committee?
a. Round Table Conference b. Hartog Commission
c. World Women's Congress d. Immoral Traffic Control Act Panel
e. Answer not known
டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி எந்தக் கல்வி ஆய்வுக் குழுவில் ஒரே பெண் உறுப்பினராக இருந்தார்?
a. வட்ட மேசை மாநாடு
b. ஹார்டோக் கமிஷன்
c. உலக மகளிர் காங்கிரஸ்
d. ஒழுக்கக்கேடான போக்குவரத்துத் தடுப்புச் சட்டக் குழு
e. விடை தெரியவில்லை

39. Which of the following pair is incorrect.
a. Tamil Arasu Kazhagam – M.P. Sivagnanam
b. Dravida Munetra kazhagam – C.N. Annadurai
c. Tamil Nadu Uzhaipalar katchi – N.G. Ranga
d. Common weal party – M.A. Manikkavelu
e. Answer not known

கீழ்க்காணும் இணைகளில் தவறானது எது?

a. தமிழ் அரசு கழகம் - M.P. சிவஞானம்
b. திராவிட முன்னேற்ற கழகம் - C.N. அண்ணாதுரை
c. தமிழ்நாடு உழைப்பாளர் கட்சி - N.G. ரங்கா
d. காமன்வீல் கட்சி - M.A. மாணிக்கவேலு
e. விடை தெரியவில்லை

40. Assertion (A): Meenambal Sivaraj's participation in the anti-Hindi agitation was her only major identity-related protest.
Reason (R): Neither before nor after did she or her husband show interest in such linguistic identity protests.
a. Both A and R are true, and R explains A
b. Both A and R are true, but R does not explain A
c. A is true, R is false
d. A is false, R is true
e. Answer not known
கூற்று (A): மீனாம்பாள் சிவராஜின் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கேற்றதுதான் அவரது அடையாளத்துடன் தொடர்புடைய ஒரே முக்கியப் போராட்டம் ஆகும்.
காரணம் (R): அதற்கு முன்போ அல்லது பின்போ அவரோ அல்லது அவரது கணவரோ அத்தகைய மொழி அடையாளப் போராட்டங்களில் ஆர்வம் காட்டவில்லை.
a. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R, A-வை விளக்குகிறது
b. A மற்றும் R இரண்டும் சரி, ஆனால் R, A-வை விளக்கவில்லை
c. A சரி, R தவறு
d. A தவறு, R சரி
e. விடை தெரியவில்லை

APPOLO STUDY CENTRE

41. What are the salient features of Erode plan?
I. Nationalisation of essential works.
II. Providing compulsory and free education to all
III. Abolition of untouchability
IV. Extending life insurance to all.
a. I, II and III b. I, II and IV c. I, III and IV
d. All the above e. Answer not known
ஈரோடு திட்டத்தின் முக்கிய அம்சங்கள் யாவை?
I. அத்தியாவசிய தொழில்களை நாட்டுடைமையாக்கல்.
II. அனைவருக்கும் கட்டாய இலவசக்கல்வி அளித்தல்.
III. தீண்டாமை ஒழிப்பு.
IV. ஆயுள் காப்பீட்டு திட்டத்தை அனைவருக்கும் விரிவுபடுத்துதல்.
a. I, II மற்றும் III b. I, II மற்றும் IV c. I, III மற்றும் IV
d. மேற்கண்ட அனைத்தும் e. விடை தெரியவில்லை

42. How many sabhas does Sathya Gnana Sabai consist of?
a. Two b. Three c. Seven
d. Eight e. Answer not known
சத்திய ஞான சபை எத்தனை சபைகளைக் கொண்டுள்ளது?
a. இரண்டு b. மூன்று c. ஏழு
d. எட்டு e. விடை தெரியவில்லை

43. Which title was conferred on Vedanayagam by the Christians of Vepery (Madras) in 1809?
a. Veda Siromany b. Suvisesha Kavirayar
c. Gnanadeepa Kavirayar d. Veda Sastriar
e. Answer not known
1809 ஆம் ஆண்டில் வேப்பேரி (சென்னை) கிறிஸ்தவர்களால் வேதநாயகத்திற்கு வழங்கப்பட்ட பட்டம் எது?
a. வேத சிரோமணி b. சுவிசேச கவிராயர்
c. ஞானதீப கவிராயர் d. வேத சாஸ்திரியார்
e. விடை தெரியவில்லை

44. Arrange in chronological order
1. Homeland 2. Home rule 3. Dravida Nadu 4. Viduthalai
a. 2-1-3-4 b. 4-3-2-1 c. 4-3-1-2
d. 4-1-2-3 e. Answer not known
காலவரிசைப்படுத்துக.
1. ஹோம் லேண்ட் (Home Land) 2. ஹோம் ரூல் (Home Rule)
3. திராவிட நாடு 4. விடுதலை
a. 2-1-3-4 b. 4-3-2-1 c. 4-3-1-2
d. 4-1-2-3 e. விடை தெரியவில்லை

45. Which work by Vedanayagam was enhanced and composed from 1810 to 1855?
a. Bethlehem Kuravanji b. Aranathintham c. Jebamalai
d. Gnana Vazhi e. Answer not known
வேதநாயகத்தின் எந்தப் படைப்பு 1810 முதல் 1855 வரை மேம்படுத்தப்பட்டு இயற்றப்பட்டது?
a. பெத்லகேம் குறவஞ்சி b. அரணந்திந்தம் c. ஜெபமாலை
d. ஞான வழி e. விடை தெரியவில்லை

46. Choose incorrect statement regarding Perarignar Anna
1. He was born on September 15, 1869.
2. Initially he was in justice party.
3. He worked as editor of Viduthalai and Malaimani.
4. He also worked as sub-editor of justice and kudiyarasu.
a. 1, 2, 3, 4 b. 1 only c. 3, 4
d. none of these e. Answer not known
பேரறிஞர் அண்ணாவைப் பொறுத்து தவறான கூற்றுகளைக் காண்க.
1. அவர் செப்டம்பர் 15, 1869ல் பிறந்தார்.
2. அவர் தொடக்காலத்தில் நீதிக்கட்சியில் இருந்தார்.
3. 'விடுதலை', 'மாலைமணி' ஆகியவற்றின் ஆசிரியராகப் பணியாற்றினார்.
4. 'ஜஸ்டிஸ்' (மற்றும்) 'குடியரசு' ஆகியவற்றின் துணை ஆசிரியராகப் பணியாற்றினார்.
a. 1, 2, 3, 4 b. 1 மட்டும் c. 3, 4
d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

47. Who was Vedanayagam's classmate and lifelong friend who later became the King of Thanjavur?
a. Thuljaji b. Shivaji of Thanjavur c. Serfoji II
d. Colin Mackenzie e. Answer not known

வேதநாயகத்தின் வகுப்புத் தோழரும் வாழ்நாள் நண்பருமான, பின்னர் தஞ்சாவூரின் மன்னரானவர் யார்?

a. துளஜாஜி
b. தஞ்சாவூர் சிவாஜி
c. இரண்டாம் சரபோஜி
d. காலின் மெக்கன்சி
e. விடை தெரியவில்லை

48. Arrange in chronological order.
1. Trichy Tamil Conference.
2. Kanchipuram Anti Hindi Conference.
3. Dravida Nadu Demand
4. Black Shirt Conference
5. Vidhuthalai Magazine

a. 2, 1, 3, 4, 5
b. 5, 2, 1, 3, 4
c. 5, 1, 2, 3, 4
d. 1, 5, 2, 3, 4
e. Answer not known

பின்வருவனவற்றை காலவரிசைப்படுத்துக.
1. திருச்சி தமிழ் மாநாடு
2. காஞ்சிபுரம் இந்தி எதிர்ப்பு மாநாடு
3. திராவிட நாடு கோரிக்கை
4. கருஞ்சட்டை மாநாடு
5. விடுதலை பத்திரிக்கை

a. 2, 1, 3, 4, 5
b. 5, 2, 1, 3, 4
c. 5, 1, 2, 3, 4
d. 1, 5, 2, 3, 4
e. விடை தெரியவில்லை

49. What ideals are prominently reflected in Prathapa Mudaliar Charithram?

a. Caste reform and astrology
b. Women's liberation and education
c. Carnatic music theory
d. Law and judiciary
e. Answer not known

பிரதாப முதலியார் சரித்திரத்தில் எந்தக் கொள்கைகள் முதன்மையாகப் பிரதிபலிக்கின்றன?

a. சாதி சீர்திருத்தம் மற்றும் ஜோதிடம்
b. பெண்கள் விடுதலை மற்றும் கல்வி
c. கர்நாடக இசை கோட்பாடு
d. சட்டம் மற்றும் நீதித்துறை
e. விடை தெரியவில்லை

50. Consider the following

Assertion (A) : Tamil Nadu Government recently announced to celebrate July 18, as Tamil Nadu Day.

Reason (R) : Anna brought the name changing resolution in Assembly on July 18, 1968.

a. Both (A) and (R) are true and (R) is the correct explanation of (A)
b. Both (A) and (R) are true and (R) is not the correct explanation of (A)
c. (A) is true, (R) is false.
d. (A) is false, (R) is true.
e. Answer not known

பின்வருவனவற்றை ஆராய்க

கூற்று (A): ஜூலை 18-ம் தேதியை தமிழ்நாடு தினமாக கொண்டாட தமிழக அரசு சமீபத்தில் அறிவித்தது.

காரணம் (R): ஜூலை 18, 1968 அன்று பேரவையில் பெயர் மாற்றத் தீர்மானத்தை அண்ணா கொண்டு வந்தார்.

a. A மற்றும் R சரி மேலும் R என்பது A விற்கு சரியான விளக்கமாகும்.
b. A மற்றும் R சரி மேலும் R என்பது A விற்கு சரியான விளக்கமல்ல
c. A சரி R தவறு
d. A தவறு R சரி
e. விடை தெரியவில்லை

51. Who among the following were admirers of Vedanayagam Pillai's works?
a. Christian Friedrich Schwarz and Serfoji II
b. Manonmaniam Sundaram Pillai and Ramalinga Swamigal
c. Reginald Heber and Robert Caldwell
d. Tyagaraja and Muthuswami Dikshitar
e. Answer not known
பின்வருபவர்களில் வேதநாயகம் பிள்ளையின் படைப்புகளைப் போற்றியவர்கள் யார்?
a. கிறிஸ்டியன் ஃபிரெட்ரிக் ஸ்வார்ட்ஸ் மற்றும் இரண்டாம் சரபோஜி
b. மனோன்மணியம் சுந்தரம் பிள்ளை மற்றும் இராமலிங்க சுவாமிகள்
c. ரெஜினால்ட் ஹெபர் மற்றும் ராபர்ட் கால்டுவெல்
d. தியாகராஜர் மற்றும் முத்துசுவாமி தீட்சிதர்
e. விடை தெரியவில்லை

52. Find out the incorrect statement
a. Vedanayagam Pillai served as District Munsiff of Mayuram for 13 years.
b. Vedanayagam Pillai made significant contributions to Carnatic music.
c. Prathapa Mudaliar Charithram (1879) is recognized as the first modern Tamil novel.
d. Vedanayagam Pillai joined the judicial court of mayavaram as a record keeper.
e. Answer not known
தவறான கூற்றைக் கண்டறியவும்
a. வேதநாயகம் பிள்ளை 13 ஆண்டுகள் மாயவரத்தின் மாவட்ட முன்சீப்பாகப் பணியாற்றினார்.
b. வேதநாயகம் பிள்ளை கர்நாடக இசைக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்புகளைச் செய்துள்ளார்.
c. பிரதாப முதலியார் சரித்திரம் (1879) முதல் நவீன தமிழ் நாவலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
d. வேதநாயகம் பிள்ளை மாயவரம் நீதிமன்றத்தில் ஆவணக் காப்பாளராகப் பணியில் சேர்ந்தார்.
e. விடை தெரியவில்லை

53. Consider the following statements regarding M.C. Raja
1. He was the first MLC from depressed class in Madras legislature.
2. He was the first depressed class minister in Madras Presidency.
3. He started Madras Provincial scheduled caste federation in 1938.

a. 1, 2 are correct    b. 1, 3 are correct    c. 2, 3 are correct
d. all are correct    e. Answer not known

M.C. ராஜாவைப் பொறுத்து கீழ்க்கண்ட கூற்றுக்களை ஆராய்க.
1. மதராஸ் சட்டமன்றத்தின் ஒடுக்கப்பட்டோர் சார்பில் முதல் MLC (சட்ட மேலவை உறுப்பினர்)
2. மதராஸ் மாகாணத்தின் ஒடுக்கப்பட்டோர் சார்பில் அமைச்சரான முதல் உறுப்பினர் இவர்
3. மதராஸ் மாகாண தாழ்த்தப்பட்டோர் கூட்டமைப்பை 1938ல் தொடங்கினார்.
a. 1, 2 சரி b. 1, 3 சரி c. 2, 3 சரி
d. அனைத்தும் சரி e. விடை தெரியவில்லை

54. Who was the founding member of Women India Association?
a. Annie Besant b. Muthulakshmi Reddy
c. Dharmambal d. Ramamirtham Ammayar
e. Answer not known
இந்திய மகளிர் சங்கத்தின் நிறுவன உறுப்பினர் யார்?
a. அன்னிபெசன்ட் b. முத்துலெட்சுமி ரெட்டி c. தர்மாம்பாள்
d. இராமமிர்தம் அம்மையார் e. விடை தெரியவில்லை

55. Which of the following resolutions were passed in the First Provincial Self-Respect Conference?
1) Equal property inheritance for women
2) Abolition of child marriage
3) Right to practice any profession for women
4) Complete abolition of religion
a. 1 and 2 only b. 1,2 and 3 c. 1 and 3 only
d. all the above e. Answer not known
முதல் மாகாண சுயமரியாதை மாநாட்டில் பின்வரும் தீர்மானங்களில் எது நிறைவேற்றப்பட்டது?
1) பெண்களுக்குச் சமமான சொத்துரிமை
2) குழந்தை திருமணத்தை ஒழித்தல்
3) பெண்கள் எந்தத் தொழிலையும் செய்வதற்கான உரிமை
4) மதத்தை முழுமையாக ஒழித்தல்
a. 1 மற்றும் 2 மட்டும் b. 1, 2 மற்றும் 3 c. 1 மற்றும் 3 மட்டும்
d. மேற்கூறிய அனைத்தும் e. விடை தெரியவில்லை

56. Choose incorrect statement regarding Dharmambal?
1. She was a Siddha Doctor.
2. She Advocated for Widow Remarriage.
3. She founded Manavar Mandram
4. She was hailed as Veera Tamilannai.
a. 1, 2 b. 2, 3 c. 1, 2, 3
d. None of these e. Answer not known
தர்மாம்பாள் - ஐக் குறித்து தவறான கூற்றுகளை ஆராயவும்.
1. அவர் ஒரு சித்த மருத்துவர்.
2. விதவை மறுமணத்தை ஆதரித்தார்.
3. மாணவர் மன்றத்தைத் துவங்கினார்.
4. 'வீரத்தமிழன்னை' என அழைக்கப்படுகிறார்.
a. 1, 2 b. 2, 3 c. 1, 2, 3
d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

57. Who was the president of the Second Provincial Self-Respect Conference?
a. W.P.A. Soundara Pandian b. M.R. Jayakar
c. Kanchi K. Shanmugam d. S. Ramanathan
e. Answer not known
இரண்டாவது மாகாண சுயமரியாதை மாநாட்டின் தலைவர் யார்?
a. W.P.A சௌந்தர பாண்டியன் b. M.R. ஜெயகர்
c. காஞ்சி K. சண்முகம் d. எஸ். ராமநாதன்
e. விடை தெரியவில்லை

58. Who is called as elder of Dravidian Movement?
a. P. Thiyagarayar b. C. Natesanar c. T.M. Nair
d. Raja of Panagal e. Answer not known
திராவிட இயக்கத்தின் மூத்தவர் என அழைக்கப்படுபவர் யார்?
a. P. தியாகராயர் b. சி. நடேசனார் c. TM நாயர்
d. பனகல் ராஜா e. விடை தெரியவில்லை

59. Assertion (A): Kandukuri Veeresalingam is known as the Father of Tamil Renaissance.
Reason (R): He encouraged women's education, widow remarriage, and wrote the first Telugu novel.
a. Both A and R are true, and R is the correct explanation of A.
b. Both A and R are true, but R is not the explanation of A.
c. A is true, but R is false.
d. A is false, but R is true.
e. Answer not known
கூற்று (A): கந்துகூரி வீரேசலிங்கம் தமிழ் மறுமலர்ச்சியின் தந்தை என்று அழைக்கப்படுகிறார்.
காரணம் (R): அவர் பெண்கல்வி, விதவை மறுமணம் ஆகியவற்றை ஊக்குவித்தார், மேலும் முதல் தெலுங்கு நாவலை எழுதினார்.
a. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கான சரியான விளக்கம்.
b. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கான சரியான விளக்கமல்ல
c. A சரி, ஆனால் R தவறு.
d. A தவறு, ஆனால் R சரி.
e. விடை தெரியவில்லை

60. Who was the first editor of Justice Magazine?
a. P. Thiyagarayar b. T.M. Nair c. C. Natesanar
d. C. Sankaran Nair e. Answer not known
'ஜஸ்டிஸ்' நாளிதழின் முதல் ஆசிரியர் யார்?
a. P. தியாகராயர் b. TM நாயர் c. C. நடேசனார்
d. C. சங்கரன் நாயர் e. விடை தெரியவில்லை

61. Match the following

| | |
|---|---|
| A. Started school in Dowlaiswaram | 1. 1887 |
| B. First widow remarriage | 2. 1874 |
| C. Brahmo Mandir constructed | 3. 1881 (11 December) |
| D. Hithakarini School built | 4. 1908 |
| E. Viveka Vardhini journal | 5. 1876 |

பொருத்துக

| | | |
|---|---|---|
| A. | தௌலீஸ்வரத்தில் பள்ளி தொடங்கப்பட்டது | 1. 1887 |
| B. | முதல் விதவை மறுமணம் | 2. 1874 |
| C. | பிரம்மோ மந்திர் கட்டப்பட்டது | 3. 1881 (டிசம்பர் 11) |
| D. | ஹிதகாரிணி பள்ளி கட்டப்பட்டது | 4. 1908 |
| E. | விவேக வர்த்தினி இதழ் | 5. 1876 |

| | A | B | C | D | E |
|---|---|---|---|---|---|
| a. | 2 | 3 | 1 | 4 | 5 |
| b. | 2 | 3 | 4 | 1 | 5 |
| c. | 1 | 2 | 3 | 4 | 5 |
| d. | 5 | 4 | 3 | 2 | 1 |

e. Answer not known

62. Find the objectives of Self Respect Movement.
1. Rational Thinking
2. Against Caste System
3. No Caste Based Surnames
4. Non-Brahmin Upliftment
5. Self-respect marriages
a. 1, 2, 3
b. 1, 2, 3, 4
c. 2, 3, 4, 5
d. All of these
e. Answer not known
சுயமரியாதை இயக்கத்தின் நோக்கங்களைக் காண்க.
1. பகுத்தறிவு சிந்தனை
2. சாதிமுறைக்கு எதிரானது.
3. சாதி அடிப்படையிலான பெயர்கள் நீக்கம்
4. பிராமணரல்லாதோர் உயர்வு.
5. சுயமரியாதைத் திருமணங்கள்
a. 1, 2, 3
b. 1, 2, 3, 4
c. 2, 3, 4, 5
d. மேற்கண்ட அனைத்தும்
e. விடை தெரியவில்லை

63. Which title was conferred on Veeresalingam by the Government in 1893?
a. Raja
b. Rao Bahadur
c. Gadya Tikkana
d. Mahamahopadhyaya
e. Answer not known
1893-ல் அரசாங்கத்தால் வீரசேலிங்கத்திற்கு வழங்கப்பட்ட பட்டம் எது?
a. ராஜா
b. ராவ் பகதூர்
c. கத்யா திக்கனா
d. மகாமஹோபாத்யாய
e. விடை தெரியவில்லை

64. Sir A.Ramasamy commented on Periyar that he was
a. Socrates of Tamil Nadu
b. Rousseau of Tamil Nadu
c. Ingersoll of Tamil Nadu
d. Lenin of Tamil Nadu
e. Answer not known
தந்தை பெரியார் குறித்து சர்.ஏ. இராமசாமி இவ்வாறு கூறினார்?
a. தமிழ்நாட்டின் சாக்ரடீஸ்
b. தமிழ்நாட்டின் ரூசோ
c. தமிழ்நாட்டின் இங்கர்சால்
d. தமிழ்நாட்டின் லெனின்
e. விடை தெரியவில்லை

65. Ramamirtham Ammaiyar began her political career in which organisation?
a. Self Respect Movement
b. Dravida Kazhagam
c. Indian National Congress
d. Dravida Munnetra Kazhagam
e. Answer not known

இராமாமிர்தம் அம்மையார் தனது அரசியல் வாழ்க்கையை எந்த அமைப்பில் தொடங்கினார்?

a. சுயமரியாதை இயக்கம் b. திராவிடர் கழகம்

c. இந்திய தேசிய காங்கிரஸ் d. திராவிட முன்னேற்றக் கழகம்

e. விடை தெரியவில்லை

66. The Tamil Script reform by Periyar was introduced in his Kudi Arasu in the year

a. 1926 b. 1978 c.1935 d. 1936 e. Answer not known

பெரியாரின் தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் அவரது ‘குடி அரசு’’ ஏட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு எது?

a. 1926 b. 1978 c. 1935 d. 1936 e. விடை தெரியவில்லை

67. During the anti-Hindi agitation, Ramamirtham Ammaiyar undertook a padayatra starting from:

a. Madras to Trichy b. Uraiyur to Madras

c. Kumbakonam to Mayuram d. Trichy to Kumbakonam

e. Answer not known

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் போது, ரமாமிர்தம் அம்மையார் எங்கிருந்து தனது பாதயாத்திரையைத் தொடங்கினார்?

a. சென்னை முதல் திருச்சி வரை b. உறையூர் முதல் சென்னை வரை

c. கும்பகோணம் முதல் மாயூரம் d. திருச்சி முதல் கும்பகோணம் வரை

d. விடை தெரியவில்லை

68. Find out the wrong statement about Ma.Po.Si?

a. Ra. P. Sethupillai called him as “Silambu selvar”

b. He started the movement “Tamilarasu Kazhagam” on 1956

c. His autobiography is named as “Enathu Porattam”

d. His book “Vallalar Kanda Orumaipadu” won Sahitya Academy award

e. Answer not known

ம.பொ.சி. பற்றிய பின்வரும் கூற்றுகளில் தவறானது?

a. ரா.பி. சேதுப்பிள்ளை அவர்களால் “சிலம்பு செல்வர்“ என்று அழைக்கப்படுகிறார்.

b. 1956 ல் ”தமிழரசுக் கழகம்“ என்ற இயக்கத்தை நிறுவினார்.

c. ”எனது போராட்டம்” என்ற பெயரில் சுயசரிதையை எழுதினார்

d. இவரது “வள்ளலார் கண்ட ஒருமைப்பாடு” என்ற நூல் சாகித்ய அகாடமி விருது பெற்றுள்ளது.

e. விடை தெரியவில்லை

69. Which nationalist leader claimed that devadasis represented national art and culture and should be retained?

a. C. Rajagopalachari b. S. Satyamurthy

c. Thiruvi Kalyanasundaram d. Mahatma Gandhi

e. Answer not known

எந்த தேசியவாத தலைவர் தேவதாசிகள் தேசிய கலை மற்றும் கலாச்சாரத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்றும் அவர்களை தக்கவைக்க வேண்டும் என்றும் கூறினார்?

a. C. ராஜகோபாலாச்சாரி b. S. சத்தியமூர்த்தி

c. திரு.வி.கல்யாணசுந்தரம் b. மகாத்மா காந்தி

e. விடை தெரியவில்லை

70. Find out the right statement about Anti-Hindi agitation during Rajaji rule (1937 – 39)

I. First Anti-Hindi Conference was held in Trichy by under the leadership of Maramalaiadigal and Bharathi dasan.

II. 1938 – December 3 was considered as Anti-Hindi day

III. The arrested protestors Thalamuthu and Natarasan died under Police custody

IV. Madras Governor Erskin made Hindi as an optional subject in 1939

a. I, II, III b. I, II, IV c. II, III, IV

d. All are correct e. Answer not known

இராஜாஜியின் ஆட்சியில் (1937 – 39) நடைபெற்ற இந்தி எதிர்ப்பு போராட்டத்தைப் பற்றிய சரியான கூற்று?

I. மறைமலையடிகள், பாரதிதாசன் ஆகியோர் தலைமையில் முதல் இந்தி எதிர்ப்பு மாநாடு திருச்சியில் நடந்தது

II. 1938 டிசம்பர் 3-இந்தி எதிர்ப்பு நாளாக அனுசரிக்கப்பட்டது.

III. தாளமுத்து மற்றும் நடராசன் ஆகியோர் போராட்டத்தில் கைதாகி, காவலில் இருக்கும் போது இறந்தனர்.

IV. ஆளுநர் எர்ஸ்கின் இந்தியை விருப்பப்பாடமாக 1939-ல் மாற்றினார்.

a. I, II, III b. I, II, IV c. II, III, IV

d. அனைத்தும் சரி e. விடை தெரியவில்லை

71. Assertion (A): Ramamirtham Ammaiyar wrote T*asikalin Mosavalai Allathu Matipettra Mainer* in *Dravida Nadu*

Reason (R): Ramamirtham Ammaiyar authored essays regularly in Kudi Arasu on the condition of women.

a. A and R are true and R is the correct explanation of A

b. A and R are true and R is not the correct explanation of A

c. A true R false

d. A false R true

e. Answer not known

கூற்று (A): ராமாமிர்தம் அம்மையார் திராவிடநாடு என்ற இதழில் தாசிகளின் மோசவலை அல்லது மதிப்பெற்ற மைனரை எழுதினார்.

காரணம் (R): ராமாமிர்தம் அம்மையார் பெண்களின் நிலை குறித்து குடி அரசு என்ற இதழில் தொடர்ந்து கட்டுரைகளை எழுதியுள்ளார்.

a. A மற்றும் R என்பது சரி மற்றும் R என்பது A இன் சரியான விளக்கம்

b. A மற்றும் R என்பது சரி மற்றும் R என்பது A இன் சரியான விளக்கம் அல்ல

c. A சரி R தவறு

d. A தவறு R சரி

e. விடை தெரியவில்லை

72. Which of the following statements are true about Iyotheethassar?

I. Dravidian Mahajana Sabha was formed in 1892.

II. Sakya Buddhist Society 1898 had branches throughout South India.

III. His Journal "Oru Paisa Tamizhan" was published since 1907.

IV. Buddhism revived in south India because of him.

a. I, III and IV only b. II, III and IV only c. I, II and IV only

d. All the above e. Answer not known

அயோத்திதாசர் தொடர்பான பின்வரும் கூற்றுகளில் சரியானவை?

I. திராவிட மகாஜன சபை 1892-இல் இவரால் தொடங்கப்பட்டது
II. சாக்கிய பௌத்த சங்கம் 1898ல் தென்னிந்தியா முழுதும் கிளைகளைக் கொண்டிருந்தது
III. அவருடைய இதழ் "ஒரு பைசாத் தமிழன்" 1907 ஆம் ஆண்டில் இருந்து வெளியிடப்பட்டது.
IV. இவரால் புத்த மதம் தென்னிந்தியாவில் புத்துயிர் பெற்றது

a. I, III மற்றும் IV மட்டும்
b. II, III மற்றும் IV மட்டும்
c. I, II மற்றும் IV மட்டும்
d. மேற்கண்ட அனைத்தும்
e. விடை தெரியவில்லை

73. Who inaugurated the Third Self Respect Conference at Virudhunagar in 1931?

a. T.S. Kunchidam
b. S. Neelavathi
c. Indrani Balasubramanian
d. Meenambal Sivaraj
e. Answer not known

1931ல் விருதுநகரில் மூன்றாவது சுயமரியாதை மாநாட்டை துவக்கி வைத்தவர் யார்?

a. T.S. குஞ்சிதம்
b. எஸ்.நீலாவதி
c. இந்திராணி பாலசுப்ரமணியன்
d. மீனாம்பாள் சிவராஜ்
e. விடை தெரியவில்லை

74. In 1934, who inaugurated the Tiruchenkod Taluk Adi Dravida Conference?

a. S. Neelavathi
b. R. Annapurani
c. Meenambal Sivaraj
d. Indrani Balasubramanian
e. Answer not known

1934ல் திருச்செங்கோடு தாலுகா ஆதி திராவிட மாநாட்டை துவக்கி வைத்தவர் யார்?

a. S. நீலாவதி
b R. அன்னபூரணி
c. மீனாம்பாள் சிவராஜ்
d. இந்திராணி பாலசுப்ரமணியன்
e. விடை தெரியவில்லை

75. What were the aims of Samarasa Suddha Sanmarga Sangam established by Ramalinga Adigal in Vadaloor?

I. The religious unity and communal harmony in the society.
II. Condemned rituals and caste belief.
III. Promoted universal love and brotherhood.
IV. Believed hunger and poverty are the greatest ill of society.

a. I, II and III only
b. II, III and IV only
c. I, III and IV only
d. All the above
e. Answer not known

வடலூரில் இராமலிங்க அடிகளால் தொடங்கப்பட்ட சமரச சுத்த சன்மார்க்க சங்கத்தின் நோக்கம் என்ன?

I. சமூகத்தில் மத ஒற்றுமை மற்றும் வகுப்புவாத நல்லிணக்கம்
II. சடங்குகளையும், சாதி நம்பிக்கையையும் கண்டனம் செய்தல்
III. உலகளாவிய அன்பையும், சகோதரத்துவத்தையும் ஊக்குவித்தல்
IV. பசியையும், வறுமையையும் சமூகத்தின் மிகப்பெரிய நோயாக நம்பியது.

a. I, II மற்றும் III மட்டும்
b. II, III மற்றும் IV மட்டும்
c. I, III மற்றும் IV மட்டும்
d. மேற்கண்ட அனைத்தும்
e. விடை தெரியவில்லை

76. Periyar encouraged women activists to speak in conferences to break the ____

a. Culture of silence b. Culture of isolation

c. Culture of exclusion d. Culture of opposition

e. Answer not known

பெரியார் எதை உடைத்தெறிய பெண் ஆர்வலர்களை மாநாடுகளில் பேச ஊக்குவித்தார்

a. அமைதி கலாச்சாரம் b. தனிமைப்படுத்தப்பட்ட கலாச்சாரம்

c. விலக்கும் கலாச்சாரம் d. எதிர்ப்பு கலாச்சாரம்

e. விடை தெரியவில்லை

77. Choose the wrong statement regarding Vaikunda Swamigal.

a. He started Samathuva Samajam.

b. He organised Thuvaiyal Bandhi

c. His movement focussed on social equality.

d. He supported conversion to Buddhism.

e. Answer not known

வைகுந்த சுவாமி பற்றிய தவறான கூற்றைக் காண்க

a. இவர் சமத்துவ சமாஜத்தை நிறுவினார்

b. இவர் துவையல் பந்தியை நடத்தினார்

c. இவரது இயக்கம் சமூக சமத்துவத்தை மையமாகக் கொண்டது

d. இவர் புத்த மதமாற்றத்தை ஆதரித்தார்

e. விடை தெரியவில்லை

78. Which women were elected as Propaganda Secretaries at the Samadharma Party conference in Erode (1933)?

1. S. Neelavathi 2. K. Kunchidam

3. Indirani Balasubramaniam 4. R. Annapurani

a. 1, 2 b. 3, 4 c. 1, 2, 3

d. All of these e. Answer not known

ஈரோட்டில் (1933) நடைபெற்ற சமதர்மக் கட்சி மாநாட்டில் பிரச்சாரச் செயலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்கள் யார்?

1. S.நீலாவதி 2. K.குஞ்சிதம்

3. இந்திராணி பாலசுப்ரமணியம் 4. R.அன்னபூரணி

a. 1, 2 b. 3, 4 c. 1, 2, 3

d. இவை அனைத்தும் e. விடை தெரியவில்லை

79. Which of the following works were published by Ramalinga Adigal.

I. Jeevakarunya Olukkam II. Ozhivilodukkam III. Thiruvarutpa

IV. Sinmaya Deepikai V. Thondai Mandala Sathagam

a. I, II, III and IV only b. II, III, IV and V only c. II, IV and V only

d. All the above e. Answer not known

இராமலிங்க அடிகளாா் பதிப்பித்த நூல்கள் எவை?

I. ஜீவகாருண்ய ஒழுக்கம் II. ஒழிவிலொடுக்கம் III. திருவருட்பா

IV. சின்மய தீபிகை V. தொண்டை மண்டலச் சதகம்

a. I, II, III, IV மட்டும் b. II, III, IV,V மட்டும் c. II, IV, V மட்டும்

d. மேற்கண்ட அனைத்தும் e. விடை தெரியவில்லை

80. In which year was Periyar's book "Penn Yen Adimaiyanal" written?

a. 1924 b. 1928 c. 1935
d. 1946 e. Answer not known

பெரியாரின் “பெண் ஏன் அடிமையானாள்” எந்த ஆண்டு எழுதப்பட்டது?

a. 1924 b. 1928 c. 1935
d. 1946 e. விடை தெரியவில்லை

81. Match the following

| Name | Related to |
|---|---|
| A. Swami Sahajananda | 1. Oppressed Hindus |
| B. M.C. Rajah | 2. Tamizhan |
| C. Pandit Iyothee Thass | 3. Nandanar Kalvi Kazhagam |
| D. Veerasalingam | 4. The Widows Home |

பொருத்துக

| பெயர் | தொடர்புடையது |
|---|---|
| A. சுவாமி சகஜாநந்தா | 1. அப்ரஸ்டு ஹின்டுஸ் (ஒடுக்கப்பட்ட இந்துக்கள்) |
| B. M.C. ராஜா | 2. தமிழன் |
| C. பண்டிட் அயோத்திதாசர் | 3. நந்தனர் கல்விக் கழகம் |
| D. வீரசலிங்கம் | 4. விதவை இல்லம் |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 3 | 1 | 2 | 4 |
| b. | 1 | 3 | 2 | 4 |
| c. | 1 | 2 | 3 | 4 |
| d. | 4 | 1 | 2 | 3 |

e. விடை தெரியவில்லை

82. Assertion (A): Periyar's view on women's education differed from conventional approaches.

Reason (R): He aimed for economic independence rather than training women as efficient housewives.

a. Both A and R are true, and R is the correct explanation of A.
b. Both A and R are true, but R is not the explanation of A.
c. A is true, but R is false.
d. A is false, but R is true
e. Answer not known

கூற்று (A): பெண்களின் கல்வி குறித்த பெரியாரின் பார்வை வழக்கமான அணுகுமுறைகளிலிருந்து வேறுபட்டது.

காரணம் (R): அவர் பெண்களைத் திறமையான இல்லத்தரசிகளாகப் பயிற்றுவிப்பதை விட, அவர்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரத்தை நோக்கமாகக் கொண்டிருந்தார்.

a. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கான சரியான விளக்கமாகும்.
b. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கான சரியான விளக்கமல்ல
c. A சரி, ஆனால் R தவறு.
d. A தவறு, ஆனால் R சரி.
e. விடை தெரியவில்லை

83. Arrange it in chronological order
1. Under the leadership of EV Ramasamy, Justice party was reorganized as 'Dravidar Kazhagam'
2. EV Ramasamy elected as president of Justice party when he was in jail.
3. EV Ramasamy organized Dravida Nadu conference demanding separate and independent "Dravida Nadu'
4. The Congress won the Madras Legislative Assembly election.

a. 1 3 2 4 b. 3 4 1 2 c. 4 2 3 1
d. 2 1 3 4 e. Answer Not known

கால வரிசைப் படி பட்டியலிடுக:
1. ஈ.வே.ராமசாமி தலைமையில் நீதிக் கட்சி "திராவிட கழகம்" என மாற்றி அமைக்கப்பட்டது.
2. ஈ.வே.ராமசாமி சிறையில் இருந்துக் கொண்டு நீதிக்கட்சி தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
3. ஈ.வே.ராமசாமி திராவிட நாடு மாநாடு நடத்தி அதில் சுதந்திர மற்றம் தனி திராவிட நாடு கோரிக்கை முன் வைத்தல்.
4. மெட்ராஸ் சட்டசபை தேர்தலை காங்கிரஸ் கட்சி வென்றது.

a. 1 3 2 4 b. 3 4 1 2 c. 4 2 3 1
d. 2 1 3 4 e. விடை தெரியவில்லை

84. What is the most famous quote associated with Sree Narayana Guru that defined his movement?
a. "One nation, one people"
b. "One caste, one religion, and one god for all human beings"
c. "Truth alone triumphs"
d. "No caste, no religion, no god"
e. Answer not known

ஸ்ரீநாராயண குருவின் இயக்கத்தை வரையறுத்த, அவருடன் தொடர்புடைய மிகவும் பிரபலமான மேற்கோள் எது?
a. "ஒரே தேசம், ஒரே மக்கள்"
b. "அனைத்து மனிதர்களுக்கும் ஒரே சாதி, ஒரே மதம், மற்றும் ஒரே கடவுள்"
c. "வாய்மையே வெல்லும்"
d. "சாதி இல்லை, மதம் இல்லை, கடவுள் இல்லை"
e. விடை தெரியவில்லை

85. Consider the following statements regarding self-respect marriages advocated by Periyar.
Bring out the statement which is not a part of self-respect marriages.
a. Marriage-conducted without a Brahmin priest
b. No religious ceremony in the marriages
c. Took place in the presence of a Government Registrar
d. Oath taken by the bride and groom.
e. Answer not known

பெரியார் ஆதரித்த சுயமரியாதை திருமணங்கள் பற்றிய பின்வரும் சொற்றொடர்களை கவனிக்கவும்.
சுயமரியாதை திருமணத்தோடு தொடர்பில்லாத சொற்றொடரை விளக்கவும்

a. பிராமண புரோகிதர் இல்லாது நடத்தப்பட்டது.
b. எந்த மதச்சார்பு வழக்கங்களும் பின்பற்றப்படவில்லை
c. அரசுப் பதிவாளர் முன்னிலையில் நடைபெற்றது
d. மணமகன் மற்றும் மணமகள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்
e. விடை தெரியவில்லை

86. Which work of Sree Narayana Guru known for authoring, widely used for community prayer in Kerala?
a. Anukampadasakam b. Daiva Dasakam
c. Atmopadesha Satakam d. Advaita poem on Krishna
e. Answer not known
கேரளாவில் சமூகப் பிரார்த்தனைக்காகப் பரவலாகப் பயன்படுத்தப்படும், ஸ்ரீநாராயண குருவால் இயற்றப்பட்ட படைப்பு எது?
a. அனுகம்பாதசகம் b. தெய்வ தசகம்
c. ஆத்மோபதேச சதகம் d. கிருஷ்ணர் மீதான அத்வைதக் கவிதை
e. விடை தெரியவில்லை

87. Which of the following statements is / are correct with regard to EVR Periyar?
(i)EVR Periyar was responsible for the establishment of Khadhi Vastralayam
(ii) EVR periyar served as the president of spinners Association
(iii) He was a member of District Board
(iv) He was the Chairman of Erode Municipal Council
a. (i) and (ii) only b. (i), (ii) and (iii) only c. (i), (ii) and (iv) only
d. AII the above e. Answer not known
கீழ்வருவனவற்றுள் ஈ.வெ.ரா. பெரியாரை பற்றி எவை சரியான கூற்று?
i. காதிவஸ்திராலயத்தை தோற்றுவிக்க காரணமானவர் ஈ.வெ.ரா. பெரியார்
ii. நூற்பாலை சங்கத்தலைவராக பணியாற்றியவர் ஈ.வெ.ரா. பெரியார்
iii. மாவட்ட குழுவில் உறுப்பினராக இருந்தார்
iv. ஈரோடு நகராட்சி கவுன்சில் தலைவராக இருந்தார்
a. i மற்றும் ii மற்றும் b. i, ii மற்றும் iii மட்டும் c. i, ii மற்றும் iv மட்டும்
d. மேற்கூறிய அனைத்தும் e. விடை தெரியவில்லை

88. Assertion (A): The Sivagiri pilgrimage was conceived to promote practical ideals like education, cleanliness, agriculture, and handicrafts.
Reason (R): Narayana Guru wanted the pilgrimage to focus solely on religious rituals and temple worship.
a. Both A and R are true, and R is the correct explanation of A.
b. Both A and R are true, but R is not the correct explanation of A.
c. A is true, but R is false.
d. A is false, but R is true.
e. Answer not known
கூற்று (A): சிவகிரி யாத்திரை கல்வி, தூய்மை, விவசாயம் மற்றும் கைவினைப்பொருட்கள் போன்ற நடைமுறை இலட்சியங்களை மேம்படுத்துவதற்காகக் கருத்தாக்கப்பட்டது.
காரணம் (R): நாராயண குரு யாத்திரை முற்றிலும் மத சடங்குகள் மற்றும் கோயில் வழிபாட்டில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என்று விரும்பினார்.

a. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கு சரியான விளக்கம்.
b. A மற்றும் R இரண்டும் சரி, ஆனால் R என்பது A-விற்கு சரியான விளக்கம் அல்ல.
c. A சரி, ஆனால் R தவறு.
d. A தவறு, ஆனால் R சரி
e. விடை தெரியவில்லை

89. Consider the following statements about Self-Respect socialist party.
I. It was founded by Jeevanandham along with his friends.
II. The party's First conference held in Trichy (1936)
III. 'Socialism' and 'Knowledge' were the journals of the party.
a. I, II True, III False b. II, III true, I False c. I, III True, II False
d. All are True e. Answer not known
சுயமரியாதை சமதர்மக் கட்சி பற்றிய கூற்றுகளைக் காண்க.
I. இது ஜீவானந்தம் மற்றும் அவரது நண்பர்களால் தோற்றுவிக்கப்பட்டது
II. கட்சியின் முதல் மாநாடு 1936 ல் திருச்சியில் நடைபெற்றது
III. "சமதர்மம் மற்றும் "அறிவு" ஆகியன கட்சியின் இதழ்கள் ஆகும்
a. I, II சரி III தவறு b. II, III சரி I தவறு c. I, III சரி II தவறு
d. அனைத்தும் சரி e. விடை தெரியவில்லை

90. When did the Vaikom Satyagraha officially begin?
a. 30 March 1924 b. 15 May 1924 c. 12 March 1924
d. 20 May 1924 e. Answer not known
வைக்கம் சத்தியாகிரகம் அதிகாரப்பூர்வமாக எப்போது தொடங்கியது?
a. 30 மார்ச் 1924 b. 15 மே 1924 c. 12 மார்ச் 1924
d. 20 மே 1924 e. விடை தெரியவில்லை

91. Consider the following statements.
I. Justice party won 63 seats in 1920 provincial election.
II. P. Thiyagarayar become first chief minister of Madras Province.
III. K.V. Reddy and Raja of Panagal were part of justice party's first Cabinet.
a. I only is correct b. I, II are correct c. I, III are correct
d. III only is correct e. Answer not known
பின்வருவனவற்றை கவனிக்கவும்.
I. 1920-ல் நடைபெற்ற மாகாண தேர்தலில் நீதிக்கட்சி 63 இடங்களைப் பெற்றது.
II. சென்னை மாகாணத்தின் முதல் முதலமைச்சராக பி.தியாகராயர் பதவியேற்றார்.
III. கே.வி. ரெட்டி மற்றும் பனகல் அரசர் ஆகியோர் நீதிக்கட்சியின் முதல் அமைச்சரவையில் அங்கம் வகித்தனர்.
a. I மட்டும் சரி b. I, II சரி c. I, III சரி
d. III மட்டும் சரி e. விடை தெரியவில்லை

92. Consider the following
1. Mahatma Gandhi visited Vaikom during the Satyagraha in 1924
2. Periyar E.V. Ramasamy and Mannathu Padmanabhan were associated with forming a committee and announcing the Kerala Paryatanam Movement
3. Kumaran Asan and Muloor S. Padmanabha Panicker disciples of Sree Narayana Guru composed poems protesting an incident related to the Vaikom roads
4. Narayana guru was born in 20 August 1856

a. 1,2,3 are correct  b. 2, 3, 4 are correct  c. 3 and 4 are correct
d. all are correct  e. Answer not known

பின்வருவனவற்றைக் கவனியுங்கள்
1. மகாத்மா காந்தி 1924-ல் சத்தியாகிரகத்தின் போது வைக்கம் சென்றார்.
2. பெரியார் ஈ.வெ. ராமசாமி மற்றும் மன்னத்து பத்மநாபன் ஆகியோர் ஒரு குழுவை அமைத்து கேரள பரியதனம் இயக்கத்தை அறிவித்ததுடன் தொடர்புடையவர்கள்.
3. ஸ்ரீநாராயண குருவின் சீடர்களான குமரன் ஆசான் மற்றும் மூலூர் எஸ். பத்மநாப பணிக்கர் ஆகியோர் வைக்கம் சாலைகள் தொடர்பான ஒரு சம்பவத்தைக் கண்டித்து கவிதைகளை இயற்றினர்.
4. நாராயண குரு 20 ஆகஸ்ட் 1856 அன்று பிறந்தார்.

a. 1, 2, 3 சரியானவை  b. 2, 3, 4 சரியானவை  c. 3 மற்றும் 4 சரியானவை
d. அனைத்தும் சரியானவை  e. விடை தெரியவில்லை

93. Consider the following statements.
I. The first meeting of Justice Party Cabinet held on January 9, 1921.
II. Madras Legislature was inaugurated on January 12, 1921 by Duke of cannought.
III. The term of first Madras legislature was 5 years.

a. II alone is correct  b. I, II are correct  c. II, III are correct
d. All are correct  e. Answer not known

பின்வருவனவற்றை கவனிக்கவும்.
I. நீதிக்கட்சியின் முதல் அமைச்சரவைக் கூட்டம் ஜனவரி 9, 1921 அன்று நடைபெற்றது.
II. மெட்ராஸ் சட்டமன்றம் ஜனவரி 12, 1921 அன்று கன்னோட் கோமகனால் திறக்கப்பட்டது.
III. முதல் சென்னை சட்டமன்றத்தின் பதவிகாலம் 5 ஆண்டுகள்.

a. II மட்டும் சரி  b. I, II சரி  c. II, III சரி
d. அனைத்தும் சரி  e. விடை தெரியவில்லை

94. Assertion (A): Ayyankali founded the Sadhu Jana Paripalana Sangham (SJPS) in 1907.
Reason (R): The primary goal was to campaign for Pulayar representation in the Travancore legislative assembly (Sree Moolam Popular Assembly).

a. Both A and R are true and R is the correct explanation of A.
b. Both A and R are true but R is NOT the correct explanation of A.
c. A is true but R is false.
d. A is false but R is true.
e. Answer not known

கூற்று (A): அய்யன்காளி 1907-ல் சாது ஜன பரிபாலன சங்கத்தை (SJPS) நிறுவினார்.
காரணம் (R): திருவிதாங்கூர் சட்டமன்றத்தில் (ஸ்ரீ மூலம் மக்கள் சபை) புலையர் சமூகத்தினருக்குப் பிரதிநிதித்துவம் கோரிப் பிரச்சாரம் செய்வதே இதன் முதன்மை நோக்கமாக இருந்தது.

a. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கான சரியான விளக்கமாகும்.
b. A மற்றும் R இரண்டும் சரி, ஆனால் R என்பது A-விற்கான சரியான விளக்கம் அல்ல.
c. A சரி, ஆனால் R தவறு.
d. A தவறு, ஆனால் R சரி.
e. விடை தெரியவில்லை

95. Arrange in chronological order
1. Hindu Religious Endowment Act
2. Voting Right to Women
3. Madras Industries Aid Act
4. Staff Selection Board

a. 2 - 1 – 3 – 4 b. 1 – 2 – 4 – 3 c. 2 – 3 – 4 -1
d. 2 – 3 – 1 – 4 e. Answer not known

காலவரிசைப்படுத்துக.
1. இந்து சமய அறநிலைய சட்டம்
2. பெண்களுக்கு வாக்குரிமை
3. மதராஸ் தொழிற்சாலைகள் உதவி சட்டம்
4. பணியாளர் தேர்வு வாரியம்

a. 2 - 1 – 3 – 4 b. 1 – 2 – 4 – 3 c. 2 – 3 – 4 -1
d. 2 – 3 – 1 – 4 e. விடை தெரியவில்லை

96. Consider the following
1. Ayyankali founded the Sadhu Jana Paripalana Sangham in 1906
2. Ayyankali also drew inspiration from the activities of Narayana Guru, a contemporary social reformer from the Ezhava caste, both had common philosophy and approach .

a. both are correct b. I only correct c. 2 only correct
d. None e. Answer not known

பின்வருவனவற்றைக் கவனியுங்கள்
1. அய்யன்காளி 1906-ல் சாது ஜன பரிபாலன சங்கத்தை நிறுவினார்.
2. அய்யன்காளி, ஈழவர் சாதியைச் சேர்ந்த சமகால சமூக சீர்திருத்தவாதியான நாராயண குருவின் செயல்பாடுகளாலும் உத்வேகம் பெற்றார் இருவருக்கும் பொதுவான தத்துவமும் அணுகுமுறையும் இருந்தன.

a. இரண்டும் சரி b. 1 மட்டும் சரி c. 2 மட்டும் சரி
d. எதுவுமில்லை e. விடை தெரியவில்லை

97. Arrange in chronological order.
1. Madras Irrigation Act
2. Annamalai University
3. Andhra University
4. First Communal G.O

a. 4 – 3 – 2 – 1 b. 4 – 1 – 2 – 3 c. 1 – 4 – 3 – 2
d. 4 – 1 – 3 – 2 e. Answer not known

காலவரிசைப்படுத்துக.
1. மதராஸ் நீர்ப்பாசன சட்டம்
2. அண்ணாமலை பல்கலைக்கழகம்
3. ஆந்திரா பல்கலைக்கழகம்
4. முதல் வகுப்புவாத அரசாணை

a. 4 – 3 – 2 – 1 b. 4 – 1 – 2 – 3 c. 1 – 4 – 3 – 2
d. 4 – 1 – 3 – 2 e. விடை தெரியவில்லை

98. Assertion (A): Ayyankali's activism in the early 20th century included supporting the right of Pulayar women to cover their upper body in public. Reason (R): This practice was already universally accepted for all communities in Travancore by the late 19th century due to the Channar Revolt.

a. Both A and R are true and R is the correct explanation of A.
b. Both A and R are true but R is NOT the correct explanation of A.
c. A is true but R is false.
d. A is false but R is true.
e. Answer not known

கூற்று (A): 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் அய்யன்காளியின் செயல்பாடுகளில், புலையர் சமூகப் பெண்கள் பொது இடங்களில் தங்கள் மேலுடலை மறைத்துக்கொள்ளும் உரிமையை ஆதரிப்பதும் அடங்கும்.

காரணம் (R): சானார் கலகத்தின் காரணமாக, 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலேயே திருவிதாங்கூரில் உள்ள அனைத்து சமூகத்தினருக்கும் இந்த வழக்கம் உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

a. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கான சரியான விளக்கமாகும்.
b. A மற்றும் R இரண்டும் சரி, ஆனால் R என்பது A-விற்கான சரியான விளக்கம் அல்ல.
c. A சரி, ஆனால் R தவறு.
d. A தவறு, ஆனால் R சரி.
e. விடை தெரியவில்லை

99. Which of the following are correct about policies of Annadurai?
1) Cooperative federalism
2) Scientific socialism
3) State autonomy
4) Protection of Tamil's culture
5) Social Justice, Secularism

a. 2, 3, 4, 5 are correct　b. 1, 2, 3, 4 are correct　c. 1, 2, 3 only correct
d. all are correct　e. Answer not known

அண்ணாதுரையின் கொள்கைகளில் பின்வருவனவற்றில் எது சரியானது?
1. கூட்டுறவு கூட்டாட்சி
2. அறிவியல் சோசலிசம்
3. மாநில சுயாட்சி
4. தமிழ் கலாச்சாரத்தை பாதுகாத்தல்
5. சமூக நீதி, மதச்சார்பின்மை

a. 2, 3, 4, 5 சரி　b. 1, 2, 3, 4 சரி　c. 1, 2, 3 மட்டும் சரி
d. அனைத்தும் சரி　e. விடை தெரியவில்லை

100. When elections were held in December 1920 in the Madras Presidency as per the Montague – Chelmsford reforms, the Justice Party obtained a comfortable majority by winning 63 seats out of 98. The Governor invited Theagaraya Chetty to form the Government. However, Theagaraya Chetty refused to head the government. Why?
a. He was not elected to the Legislative Council
b. He held that head of a political party can't hold a post in the cabinet.
c. He was not a graduate so he could not lead the cabinet.
d. He was a big-businessmen which prevented to become the Cabinet Minister
e. Answer not known

1920 டிசம்பரில் மெட்ராஸ் மாகாணத்தில் மாண்டேகு - செம்ஸ்ஃபோர்ட்டு சீர்திருத்தங்களின்படி தேர்தல்கள் நடந்தபோது, நீதிக்கட்சி 98-ல் 63 இடங்களில் வெற்றி பெற்று வசதியான பெரும்பான்மையைப் பெற்றது. கவர்னர் தியாகராய செட்டியை ஆட்சி அமைக்க அழைத்தார். , தியாகராய செட்டி அரசு தலைமை ஏற்க மறுத்தார். ஏன்?"

a. சட்டமன்ற சபைக்கு அவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை.
b. ஒரு அரசியல் கட்சியின் தலைவர் அமைச்சரவையில் பதவி வகிக்க முடியாது என்று அவர் கூறினார்.
c. அவர் ஒரு பட்டதாரி இல்லை அதனால் அவரால் அமைச்சரவையை வழிநடத்த முடியவில்லை.
d. அவர் ஒரு பெரிய தொழிலதிபராக இருந்ததால், அமைச்சரவை அமைச்சராக வர முடியவில்லை.
e. விடை தெரியவில்லை

101. Assertion (A): Ayyankali was inspired by the social reformer Ayyavu Swamikal and established a branch of his organization, Brahma Nishta Matam, in 1904.
Reason (R): Swamikal preached against caste divisions primarily to prevent mass conversions from Hinduism to Islam.
a. Both A and R are true and R is the correct explanation of A.
b. Both A and R are true but R is NOT the correct explanation of A.
c. A is true but R is false.
d. A is false but R is true.
e. Answer not known

கூற்று (A): அய்யன்காளி சமூக சீர்திருத்தவாதியான அய்யாவு சுவாமிகளால் ஈர்க்கப்பட்டு, அவரது அமைப்பான பிரம்ம நிஷ்டா மடத்தின் ஒரு கிளையை 1904-ல் நிறுவினார்.
காரணம் (R): சுவாமிகள் சாதிப் பிரிவுகளுக்கு எதிராகப் போதித்தார், முதன்மையாக இந்து மதத்திலிருந்து இஸ்லாமிற்கு பெருமளவில் மதம் மாறுவதைத் தடுப்பதற்காகவே இதைச் செய்தார்.
a. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கான சரியான விளக்கமாகும்.
b. A மற்றும் R இரண்டும் சரி, ஆனால் R என்பது A-விற்கான சரியான விளக்கம் அல்ல.
c. A சரி, ஆனால் R தவறு.
d. A தவறு, ஆனால் R சரி.
e. விடை தெரியவில்லை

102. Which year did Ayyankali defy caste restrictions by riding a bullock cart on public roads?

| | | |
|---|---|---|
| a. 1888 | b. 1893 | c. 1900 |
| d. 1904 | e. Answer not known | |

அய்யன்காளி எந்த ஆண்டு பொதுச் சாலைகளில் மாட்டு வண்டியில் பயணம் செய்து சாதித் தடைகளை மீறினார்?

| | | |
|---|---|---|
| a. 1888 | b. 1893 | c. 1900 |
| d. 1904 | e. விடை தெரியவில்லை | |

103. Find out the incorrect statement related to Justice Party.
a. Women were given the same right to vote as men.
b. Madras University Restructuring act passed.
c. The Justice Party was not a regime that fully co-operated with the British.
d. Sanskrit was removed as a compulsory subject for Medical studies.
e. Answer not known

நீதி கட்சி தொடர்பான தவறான கூற்றைக் கண்டறிக:
a. ஆண்களைப் போலவே பெண்களுக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டது.
b. சென்னை பல்கலைக்கழக மறுசீரமைப்பு சட்டம் நிறைவேற்றப்பட்டது
c. நீதிக்கட்சி ஆங்கிலேயர்களுடன் முழுமையாக ஒத்துழைத்த ஆட்சி அல்ல
d. மருத்துவப் படிப்புக்கு சமஸ்கிருதம் கட்டாயப் பாடமாக இருந்தது நீக்கப்பட்டது.
e. விடை தெரியவில்லை

104. Find out the incorrect statements among the following with respect C.N. Annadurai.
a. On 17th August 1968 both the lower and upper houses of Madras Legislature, by the resolution passed, changed the name of the state as Tamilnadu.
b. Abolished land tax to assist the poor peasant.
c. On the 15th May 1966, Padiyarisi scheme was launched in Madras and Coimbatore.
d. The state Motto Satyameva Jayadhe (Truth Alone Triumphs) in Sanskrit was Altered as Vaimaye Vellum in Tamil.
e. Answer not known

சி.என். அண்ணாதுரை தொடர்பாக பின்வரும் அறிக்கைகளில் தவறான அறிக்கைகளைக் கண்டறிக.
a. ஆகஸ்ட் 17, 1968 அன்று, சென்னை சட்டமன்றத்தின் கீழ் மற்றும் மேல் சபைகள், நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் மூலம், மாநிலத்தின் பெயரை தமிழ்நாடு என்று மாற்றின.
b. ஏழை விவசாயிகளுக்கு உதவுவதற்காக நில வரி ரத்து செய்யப்பட்டது.
c. 1966 ஆம் ஆண்டு மே 15 ஆம் தேதி சென்னை மற்றும் கோயம்புத்தூரில் படியரிசி திட்டம் தொடங்கப்பட்டது.
d. சமஸ்கிருதத்தில் சத்தியமேவ ஜெயதே (சரி மட்டுமே வெற்றி) என்ற அரசின் முழக்கம் தமிழில் வாய்மையே வெல்லும் என மாற்றப்பட்டது.
e. விடை தெரியவில்லை

105. Which was one of the composed (not just published) texts by Thamotharampillai?
a. Tolkappiyam b. Kattalai Kalithurai c. Purananuru
d. Manimekalai e. Answer not known

தாமோதரம்பிள்ளையால் இயற்றப்பட்ட (வெளியிடப்பட்டதல்ல) நூல்களில் ஒன்று எது?
a. தொல்காப்பியம் b. கட்டளைக் கலித்துறை c. புறநானூறு
d. மணிமேகலை e. விடை தெரியவில்லை

106. Assertion (A): C. W. Thamotharampillai is considered a pioneer in the rediscovery and publication of classical Tamil literature.
Reason (R): He was the first to systematically hunt for long-lost Sangam-era manuscripts and publish them using modern textual criticism.
a. Both A and R are true and R is the correct explanation of A.
b. Both A and R are true but R is NOT the correct explanation of A.
c. A is true but R is false.
d. A is false but R is true.
e. Answer not known

கூற்று (A): சி. டபிள்யூ. தாமோதரம்பிள்ளை செவ்வியல் தமிழ் இலக்கியங்களை மீட்டெடுத்து வெளியிடுவதில் ஒரு முன்னோடியாகக் கருதப்படுகிறார்.

காரணம் (R): நீண்ட காலமாக மறைந்திருந்த சங்க காலச் சுவடிகளை முறையாகத் தேடி, நவீன உரைத் திறனாய்வைப் பயன்படுத்தி அவற்றை வெளியிட்ட முதல் நபர் இவரே.

a. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கான சரியான விளக்கமாகும்.
b. A மற்றும் R இரண்டும் சரி, ஆனால் R என்பது A-விற்கான சரியான விளக்கம் அல்ல.
c. A சரி, ஆனால் R தவறு.
d. A தவறு, ஆனால் R சரி.
e. விடை தெரியவில்லை

107. Which of the following books compiled the principles of Vaikundha Swamigal?

I. Adisaya Thirattu
II. Vaakkum Vazhvum
III. Arul Nool
IV. Akilathirattu Ammanai

a. I, III and IV only b. II, III and IV only c. I, II and IV only
d. All the above e. Answer not known

வைகுந்த சுவாமியின் கோட்பாடுகள் அடங்கிய நூல்கள் யாவை?

I. அதிசயத்திரட்டு
II. வாக்கும் வாழ்வும்
III. அருள்நூல்
IV. அகிலத்திரட்டு அம்மானை

a. I, III மற்றும் IV மட்டும்
b. ii, iii மற்றம் IV மட்டும்
c. I, II மற்றும் IV மட்டும்
d. மேற்கண்ட அனைத்தும்
e. விடை தெரியவில்லை

108. In 1917, the justice party leaders organized a meeting at "The spur Tank", its aim was

a. For the welfare of the Panchamas
b. Removal of Caste Society
c. It is not applicable for Non-Brahmins
d. It helped the movement make rapid strides
e. Answer not known

1917 ஆம் ஆண்டு, ஸ்பர் டேங்கில் நீதிக்கட்சி தலைவர்களால் கூட்டம் ஒன்று கூட்டப்பட்டது. அக்கூட்டத்தின் நோக்கமாவது

a. பஞ்சமர்களின் நலனுக்காக
b. சாதி சமூகத்தை அகற்றுதல்
c. பிராமணர் அல்லாதவர்களுக்கு இது பொருந்தாது
d. இவ்வியக்கம் வேகமாக முன்னேற உதவியது
e. விடைதெரியவில்லை

109. Assertion (A): The government conferred the title 'Rao Bahadur' on Thamotharampillai in 1895.

Reason (R): This award was given specifically for his groundbreaking work in publishing the *Kalittokai* in 1887.

a. Both A and R are true and R is the correct explanation of A.
b. Both A and R are true but R is NOT the correct explanation of A.
c. A is true but R is false.
d. A is false but R is true.
e. Answer not known

கூற்று (A): அரசாங்கம் 1895 ஆம் ஆண்டில் தாமோதரம்பிள்ளைக்கு “ராவ் பகதூர்“ பட்டத்தை வழங்கியது.
காரணம் (R): 1887 ஆம் ஆண்டில் கலித்தொகையை வெளியிட்டதில் அவர் செய்த முன்னோடிப் பணிக்காகவே இந்த விருது வழங்கப்பட்டது.

a. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கான சரியான விளக்கமாகும்.
b. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கான சரியான விளக்கமல்ல
c. A சரி, ஆனால் R தவறு.
d. A தவறு, ஆனால் R சரி.
e. விடை தெரியவில்லை

110. Who was honoured with such titles as Rao Sahib (1926), Rao Bahadur (1930) and Divan Bahadur (1936) for his selfless social services?

a. Rettaimalai Srinivasan
b. Mylai Chinnathambi Raja
c. M. Singaravelar
d. Dr. C. Natesanar
e. Answer not known

தன்னலமற்ற சேவைக்காக ராவ் சாகிப் (1926), ராவ் பகதூர் (1930), திவான் பகதூர் (1936) ஆகிய பட்டங்களைப் பெற்றவர் யார்?

a. இரட்டைமலை சீனிவாசன்
b. மயிலை சின்னதம்பி ராஜா
c. ம. சிங்கார வேலர்
d. டாக்டர். சி.நடேசனார்
e. விடை தெரியவில்லை

111. Arrange the following events in Thamotharampillai's life in correct chronological order:

1. Published 'Kalittokai'
2. Appointed Judge of Pudukottai High Court
3. Published 'Needhi Neri Vilakkam'
4. Became first student to appear for B.A. exam from University of Madras
5. Conferred title 'Rao Bahadur'

a. 3-4-1-2-5 b. 4-3-1-2-5 c. 3-4-2-1-5
d. 4-3-2-1-5 e. Answer not known

தாமோதரம்பிள்ளையின் வாழ்க்கையில் நடந்த பின்வரும் நிகழ்வுகளைச் சரியான காலவரிசைப்படி வரிசைப்படுத்துக:

1. கலித்தொகையை வெளியிட்டார்
2. புதுக்கோட்டை உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்
3. நீதி நெறி விளக்கத்தை வெளியிட்டார்
4. சென்னை பல்கலைக்கழகத்தில் பி.ஏ. தேர்வுக்குத் தோற்றிய முதல் மாணவரானார்
5. “ராவ் பகதூர்“ பட்டம் வழங்கப்பட்டது

a. 3-4-1-2-5 b. 4-3-1-2-5 c. 3-4-2-1-5
d. 4-3-2-1-5 e. விடை தெரியவில்லை

112. Match the following

| | |
|---|---|
| A. Temple Entry Authorisation and Indemnity Act | 1. Annadurai |
| B. Temple Authorisation Act | 2. Rajaji |
| C. Self-Respect Marriages Act | 3. Omandurar |
| D. Madras State abolition of Zamindari system | 4. Kumarasamy Raja |

கீழ்கண்டவற்றை பொருத்துக:

| | |
|---|---|
| A. ஆலய நுழைவு மற்றும் இழப்பீட்டுச் சட்டம் | 1. அண்ணாதுரை |
| B. ஆலய நுழைவுச் சட்டம் | 2. இராஜாஜி |
| C. சுய மரியாதைத் திருமணங்கள் சட்டம் | 3. ஓமந்தூரார் |
| D. சென்னை மாகாண ஜமீன் ஒழிப்பு சட்டம் | 4. குமாரசாமி ராஜா |

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 1 | 2 | 3 | 4 |
| b. | 2 | 3 | 4 | 1 |
| c. | 3 | 4 | 2 | 1 |
| d. | 2 | 3 | 1 | 4 |

e. விடை தெரியவில்லை

113. Which of the following statements is NOT true about C.W. Thamotharampillai?
a. He studied at Vaddukottai Seminary in Jaffna
b. He converted to Christianity while in Madras
c. He worked as editor of Tamil Nadu Daily Gazette
d. He collaborated with U.V. Swaminatha Iyer
சி.டபிள்யூ. தாமோதரம்பிள்ளை பற்றி பின்வரும் கூற்றுகளில் எது சரியல்ல?
a. அவர் யாழ்ப்பாணத்தில் உள்ள வட்டுக்கோட்டை செமினரியில் கல்வி பயின்றார்
b. அவர் சென்னையில் இருந்தபோது கிறிஸ்தவ மதத்திற்கு மாறினார்
c. அவர் தமிழ்நாடு டெய்லி கெசட்டின் ஆசிரியராகப் பணியாற்றினார்
d. அவர் உ.வே. சுவாமிநாத ஐயருடன் இணைந்து பணியாற்றினார்
e. விடை தெரியவில்லை

114. Arrange these events in Maraimalai Adigal's life in correct chronological order:
1. Changed name to Maraimalai Adigal
2. Published first novel 'Kumuthavalli'
3. Worked as sub-editor for 'Siddantha Deepikai'
4. Moved to Pallavaram as a Sanyasin
5. Founded Saiva Siddhanta Maha Samajam
a. 3-5-2-4-1 b. 5-3-4-2-1 c. 3-5-4-2-1
d. 5-3-2-4-1 e. Answer not known
மறைமலை அடிகளின் வாழ்க்கையில் நடந்த இந்த நிகழ்வுகளை சரியான காலவரிசைப்படி வரிசைப்படுத்துங்கள்:
1. மறைமலை அடிகள் என்று பெயர் மாற்றம்
2. வெளியான முதல் நாவல் "குமுதவல்லி"
3. "சித்தாந்த தீபிகை"க்கு துணை ஆசிரியராகப் பணியாற்றினார்.
4. சன்னியாசியாக பல்லாவரம் சென்றார்
5. சைவ சித்தாந்த மகா சமாஜத்தை நிறுவினார்
a. 3-5-2-4-1 b. 5-3-4-2-1 c. 3-5-4-2-1
d. 5-3-2-4-1 e. விடை தெரியவில்லை

115. "The thoughts of Periyar were as strong as diamond but the brightness of diamond was found in the heart of Anna" was said by
a. Dr. K. Karunanidhi b. Dr.K. Anbazhagan c. E.V.K. Sampath
c. M.L. Thangappa e. Answer not known

“பெரியாரின் சிந்தனைகள் வைரத்தைப் போன்று வலிமையானவை ஆனால் அந்த வைரத்தின் வெளிச்சத்தை அண்ணாவின் இதயத்தில் காணலாம்” என கூறியது.

a. முனைவர். க.கருணாநிதி  b. முனைவர். க. அன்பழகள்  c. ஈ.வி.கே. சம்பத்
d. எம்.எல். தங்கப்பா  e. விடைதெரியவில்லை

116. Which among the following was a Resolution passed by an emergency meeting of the Tamilnadu Legislative Assembly on 23 January 1968?

a. Alcohol Exclusion Policy  b. Policy of State Autonomy
c. Bilingual Policy  d. Collective Economic Policy
e. Answer not known

கீழ்கண்டவற்றில் 1968 ஜனவரி 23ஆம் தேதி தமிழ்நாடு சட்டப்பேரவையின் அவசரக் கூட்டம் கூட்டப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் எது?

a. மதுவிலக்குக் கொள்கை  b. மாநில சுயாட்சிக் கொள்கை
c. இருமொழிக் கொள்கை  d. கூட்டுப் பொருளாதாரக் கொள்கை
e. விடை தெரியவில்லை

117. Consider the following

Assertion (A): Maraimalai Adigal changed his name from Vedhachalam to Maraimalai Adigal.

Reason (R): This change reflected his advocacy for using Tamil devoid of Sanskrit words as part of the Tanittamil Iyakkam.

a. Both A and R are true and R is the correct explanation of A.
b. Both A and R are true but R is NOT the correct explanation of A.
c. A is true but R is false
d. A is false but R is true.
e. Answer not known

பின்வருவனவற்றைக் கவனியுங்கள்

கூற்று (A): மறைமலை அடிகள் தனது பெயரை வேதாசலம் என்பதிலிருந்து மறைமலை அடிகள் என்று மாற்றிக்கொண்டார்.

காரணம் (R): இந்த மாற்றம், தனித்தமிழ் இயக்கத்தின் ஒரு பகுதியாக சமஸ்கிருத வார்த்தைகள் இல்லாத தமிழைப் பயன்படுத்துவதற்கான அவரது நிலைப்பாட்டைப் பிரதிபலித்தது.

a. A மற்றும் R இரண்டும் சரி, மேலும் R என்பது A-விற்கான சரியான விளக்கமாகும்.
b. A மற்றும் R இரண்டும் சரி, ஆனால் R என்பது A-விற்கான சரியான விளக்கம் அல்ல.
c. A சரி, ஆனால் R தவறு.
d. A தவறு, ஆனால் R சரி.
e. விடை தெரியவில்லை

118. The members of the Justice Party were sent to meet Joint select committee in London for finalise Government India Act in 1919

i. Arcot Ramasamy Mudaliyar
ii. Koka Apparao
iii. T.A. Ramalingam
iv. S.K. Thulasiram

(A) (i) and (ii)  (B) (ii) and (iii)  (C) (iii), (ii), (iv)
(D) (i), (ii), (iv)  (E) Answer not known

1919-ம் ஆண்டு இந்திய அரசு சட்டத்தை இறுதி செய்வதற்காக அமைக்கப்பட்ட கூட்டுத் தேர்வுக் குழுவை லண்டனில் சந்திக்க சென்ற நீதிக்கட்சி உறுப்பினர்கள்

i. ஆற்காடு இராமசாமி முதலியார்

ii. கோகா அப்பாராவ்

iii. டி.ஏ. ராமலிங்கம்

iv. எஸ்.கே. துளசிராம்

A. i மற்றும் ii B. ii மற்றும் iii C. iii, ii, iv

D. i, ii, iv E. விடை தெரியவில்லை

119. Periyar's international travels (1929–1932) included visits to which countries?

1. Soviet Union 2. England 3. Japan

4. United States 5. Germany

a. 1, 2, 5 b. 1, 3, 5 c. 1, 2, 3, 4

d. all the above e. Answer not known

பெரியாரின் சர்வதேசப் பயணங்களில் (1929–1932) பின்வரும் எந்தெந்த நாடுகள் அடங்கும்?

1. சோவியத் யூனியன் 2. இங்கிலாந்து 3. ஜப்பான்

4. அமெரிக்கா 5. ஜெர்மனி

a. 1, 2, 5 b. 1, 3, 5 c. 1, 2, 3, 4

d. மேற்கூறிய அனைத்தும் e. விடை தெரியவில்லை

120. How did Periyar's approach to social reform differ from Gandhi's?

a. Periyar focused on spiritual purification, Gandhi on political freedom
b. Periyar rejected religion and caste entirely, Gandhi worked within Hindu framework
c. Periyar supported British rule, Gandhi opposed it
d. Periyar advocated violence, Gandhi believed in non-violence
e. Answer not known

சமூக சீர்திருத்தம் குறித்த பெரியாரின் அணுகுமுறை காந்தியின் அணுகுமுறையிலிருந்து எவ்வாறு வேறுபட்டது?

a. பெரியார் ஆன்மீகத் தூய்மையில் கவனம் செலுத்தினார், காந்தி அரசியல் சுதந்திரத்தில் கவனம் செலுத்தினார்.
b. பெரியார் மதம் மற்றும் சாதியை முழுமையாக நிராகரித்தார், காந்தி இந்து மதக் கட்டமைப்புக்குள் பணியாற்றினார்.
c. பெரியார் பிரிட்டிஷ் ஆட்சியை ஆதரித்தார், காந்தி அதை எதிர்த்தார்.
d. பெரியார் வன்முறையை ஆதரித்தார், காந்தி அகிம்சையை நம்பினார்.
e. விடை தெரியவில்லை

121. Assertion [A]:Justice Party opposed the Home Rule Movement of Annie Besant.

Reason [R]: Justice Party feared that Dominion status would give more powers to the Brahmins.

A. [A] is true but [R] is false
B. Both [A] and [R] are true and [R] is the correct explanation of [A]
C. [A] is false but [R] is true
D. Both [A] and [R] are true but [R] is not correct explanation of [A]
E. Answer not known

கூற்று (A): நீதிக்கட்சி அன்னிபெசன்ட்டின் தன்னாட்சி இயக்கத்தை எதிர்த்தது.
காரணம் (R): டொமினியன் அந்தஸ்து பிராமணர்களுக்கு அதிக அதிகாரத்தினை வழங்கக்கூடும் என கவலைப்பட்டது.

A. (A) சரி ஆனால் (R) தவறு
B. (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கான சரியான விளக்கம்
C. (A) தவறு ஆனால் (R) சரி
D. (A) மற்றும் (R) இரண்டும் சரி ஆனால் (R) என்பது (A) விற்கான சரியான விள்ககம் அல்ல
E. விடை தெரியவில்லை

122. Periyar's ideas influenced which national political party and its founder?
- a. Congress socialist party – narendra dev
- b. Bahujan Samaj Party – Kanshi Ram
- c. Self respect party – oscar fernadis
- d. Samajwadi party – mulayam singh yadav
- e. Answer not known

பெரியாரின் கருத்துக்கள் எந்த தேசிய அரசியல் கட்சியையும் அதன் நிறுவனரையும் பாதித்தன?
- a. காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சி – நரேந்திர தேவ்
- b. பகுஜன் சமாஜ் கட்சி – கன்ஷி ராம்
- c. சுயமரியாதைக் கட்சி – ஆஸ்கர் பெர்னாண்டஸ்
- d. சமாஜ்வாடி கட்சி – முலாயம் சிங் யாதவ்
- e. விடை தெரியவில்லை

123. Assertion [A]: K.M Balasubramanian, author of south Indian Celebrities compared Dr. C. Natesa Mudaliyar to Mahathma Gandhi.
Reason [R]: He was the epitome of love, character, tolerance, compromise and he was the heart of justice Party.
- a. [A] is true but [R] is false
- b. Both [A] and [R] are true; and [R] is the correct explanation of [A]
- c. [A] is false, [R] is true
- d. Both [A] and [R] are true; but [R] is not the correct explanation of [A]
- e. Answer not known

கூற்று (A):தென்னிந்திய பிரபலங்கள் என்ற நூலின் ஆசிரியர் K.M. பாலசுப்பிரமணியன், டாக்டர். சி. நடேச முதலியாரை மகாத்மா காந்தியுடன் ஒப்பிட்டு எழுதினார்.
காரணம் (R): நீதிக்கட்சியின் இதயமாகத் திகழ்ந்த நடேச முதலியார் அன்புக்கும், பண்புக்கும், பொறையுடைமைக்கும், சமரச மனப்பான்மைக்கும் எடுத்துக்காட்டாக விளங்கினார்.
- a. கூற்று (A) சரி ஆனால் காரணம் (R) தவறு.
- b. கூற்று (A), காரணம் (R) இரண்டும் சரி மேலும் காரணம் (R) கூற்று (A) ன் சரியான விளக்கம் ஆகும்.
- c. கூற்று (A) தவறு காரணம் (R) சரி
- d. கூற்று (A) காரணம் (R) இரண்டும் சரி, ஆனால் காரணம் (R) கூற்று (A) வை விளக்கவில்லை என்பது சரி
- e. விடை தெரியவில்லை

124. Match correctly the Periyar E.V.R. started Newspaper and Journals with their years:

A. Kudi Arasu — 1. 1935
B. Puratchi — 2. 1925
C. Paguththarivu — 3. 1934
D. Viduthalai — 4. 1933

பெரியார் ஈ.வெ.ரா. தொடங்கிய செய்தித் தாள்கள் மற்றும் இதழ்களை, தொடங்கிய வருடத்துடன் பொருத்துக:

A. குடி அரசு — 1. 1935
B. புரட்சி — 2. 1925
C. பகுத்தறிவு — 3. 1934
D. விடுதலை — 4. 1933

| | A | B | C | D |
|---|---|---|---|---|
| a. | 2 | 4 | 3 | 1 |
| b. | 2 | 4 | 1 | 3 |
| c. | 4 | 2 | 1 | 3 |
| d. | 1 | 4 | 3 | 2 |

e. விடை தெரியவில்லை

125. What was the name of the Saivite institution founded by Maraimalai Adigal?

a. Saiva Siddhanta Maha Samajam
b. Podhunilaik Kazhagam
c. Thiru Murugan Press
d. Dravidar Kazhagam
e. Answer not known

மறைமலை அடிகளால் நிறுவப்பட்ட சைவ நிறுவனத்தின் பெயர் என்ன?

a. சைவ சித்தாந்த மகா சமாஜம்
b. பொதுநிலைக் கழகம்
c. திருமுருகன் பிரஸ்
d. திராவிடர் கழகம்
e. விடை தெரியவில்லை

126. Arrange the following events in their chronological order.

1. Periyar published the book 'Pen Yaen Adimaiyanaal'.
2. Periyar started the Tamil bimonthly 'Unmai' at Tiruchirappalli.
3. Periyar was arrested for publishing a Tamil translation of Bhagat Singh's pamphlet 'Why I am An Atheist'.
4. The title 'Periyar' was conferred by the Tamilnadu Women Conference held in Madras.

A. (1), (3), (4), (2) B. (1), (4), (3), (2) C. (4), (1), (2), (3)
D. (4), (3), (2), (1) E. Answer not known

பின்வரும் நிகழ்வுகளை அவற்றின் காலவரிசைப்படி வரிசைப்படுத்தவும்.

1. பெரியார் 'பெண் ஏன் அடிமையானாள்' என்ற புத்தகத்தை வெளியிட்டார்.
2. பெரியார் 'சரி' என்ற தமிழ் இருமாத இதழை திருச்சிராப்பள்ளியில் தொடங்கினார்.
3. பகத் சிங்கின் 'நான் ஏன் நாத்திகன்' என்ற துண்டு பிரசுரத்தின் தமிழ் மொழிபெயர்ப்பை வெளியிட்டதற்காக பெரியார் கைதுச் செய்யப்பட்டார்.
4. சென்னையில் நடைபெற்ற தமிழ்நாடு பெண்கள் மாநாட்டில் 'பெரியார்' என்ற பட்டம் வழங்கப்பட்டது.

A. 1, 3, 4, 2 B. 1, 4, 3, 2 C. 4, 1, 2, 3 D. 4, 3, 2, 1 E. விடை தெரியவில்லை

127. Which of the following statements about Periyar is true?
a. Periyar remained a theist throughout his life.
b. Periyar became an atheist after his visit to Kashi.
c. Periyar supported the compulsory teaching of Hindi in schools.
d. Periyar advocated abolishing private ownership completely.
e. Answer not known

பெரியார் குறித்த பின்வரும் கூற்றுகளில் எது சரி?
a. பெரியார் தனது வாழ்நாள் முழுவதும் ஒரு ஆத்திகராகவே இருந்தார்.
b. காசிக்குச் சென்று வந்த பிறகு பெரியார் ஒரு நாத்திகர் ஆனார்.
c. பள்ளிகளில் இந்தி கட்டாயமாக கற்பிக்கப்படுவதை பெரியார் ஆதரித்தார்.
d. தனிப்பட்ட சொத்துரிமையை முழுமையாக ஒழிக்க வேண்டும் என்று பெரியார் வாதிட்டார்.
e. விடை தெரியவில்லை

128. Who was the first Indian to act as the Governor of Madras.
a. Mohammad Usman
b. Sir C. P. Ramaswami Iyer
c. A. T. Panneerselvam
d. Sir J. P. Srivastava.
e. Answer not known

மெட்ராஸின் ஆளுநராகச் செயல்பட்ட முதல் இந்தியர் யார்.
a. முகமது உஸ்மான்
b. சர் C.P. ராமசாமி ஐயர்
c. A.T.. பன்னீர்செல்வம்
d. சர் J.P. ஸ்ரீவஸ்தவா.
e. விடை தெரியவில்லை

129. Who were appointed as sub-editors of the newspaper Justice?
a. P. N. Raman Pillai and M. S. Purnalingam Pillai
b. C. Karunakara Menon and Bhaktavatsalam Pillai
c. A. C. Parthasarathi Naidu and Pitti Theagaraya Chetty
d. Natesa Mudaliar and Rajarathna Mudaliyar
e. Answer not known

ஜஸ்டிஸ் என்ற செய்தித்தாளின் துணை ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்கள் யார்?
a. P.N. ராமன் பிள்ளை மற்றும் M.S. பூர்ணலிங்கம் பிள்ளை
b. C. கருணாகர மேனன் மற்றும் பக்தவத்சலம் பிள்ளை
c. A.C. பார்த்தசாரதி நாயுடு மற்றும் பிட்டி தியாகராய செட்டி
d. நடேச முதலியார் மற்றும் ராஜரத்ன முதலியார்
e. விடை தெரியவில்லை

130. Which ancient Tamil text did Periyar praise as containing scientific and philosophical truths and having secular nature?
a. Silappatikaram
b. Manimekalai
c. Thirukkural
d. Tolkappiyam
e. Answer not known

அறிவியல் மற்றும் தத்துவ சரிகளைக் கொண்டதாகவும், மதச்சார்பற்ற தன்மை உடையதாகவும் எந்தப் பண்டைய தமிழ் நூலை பெரியார் பாராட்டினார்?
a. சிலப்பதிகாரம்
b. மணிமேகலை
c. திருக்குறள்
d. தொல்காப்பியம்
e. விடை தெரியவில்லை

131. Assertion (A): Periyar's legacy continues to influence Tamil Nadu politics and social movements.
Reason (R): His ideas of social justice, anti-casteism, and Dravidian identity have been embraced by multiple political parties and leaders.
a. Both A and R are true, and R is the correct explanation of A.
b. Both A and R are true, but R is NOT the correct explanation of A.
c. A is true, but R is false.
d. A is false, but R is true.
e. Answer not known

